Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 19, 2022

திங்கட்கிழமை செப்டெம்பர் 19, 2022 | ஒளி: 08 கதிர்: 102 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## சுவைக்கக் கூடாது

இறக்குமதிச் செய்யப்படும் பழங்களின் விலைகள் என்றுமில்லாத வகையில் அதிகரித்துள்ளன. தோடம்பழமொன்றின் விலை 600 ரூபாயை விடவும் அதிகரித்துள்ளது.

தோடம்பழம் ஒரு கிலோ கிராம் 3,075 ரூபாய்க்கும், திராட்சைபழம் ஒரு கிலோ கிராம் 5,000 ரூபாய்க்கும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

தொடர்ச்சி P2

தொல்லியல் பகுதிகளாக

## விவசாய நிலங்கள் அடையாளம்

### மக்களின் வாழ்வாதாரத்தை பறிக்கும் செயல்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, குருந்தூர் மலைப்பகுதியை அண்டிய தமிழர்களுக்குச் சொந்தமான சுமார் 498 ஏக்கருக்கும் அதிகளவான விவசாய நிலப்பகுதிகள், தொல்லியல் பகுதிகளாக அடையாளமிடப்படுவது அந்த மக்களின் முற்றுமுழுதான வாழ்வாதாரத்தை பறிக்கும் செயலாகுமென வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராஜா ரவிகரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





# விஷ அரிசி பொய்

**நாட்டை சீர்குலைக்கும் சக்திகளால் இவ்வாறான பொய்யான அறிக்கைகள் செய்திகளாக கசிந்து விடுகின்றன**

**'இறக்குமதி செய்யப்படும் அரிசியில் கன உலோகங்கள் இருப்பதால், சிறுநீரக நோய், புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள்'**

விஷம் அடங்கிய அரிசி இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சில ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் அரசாங்கத் தகவல்கள் திணைக்களம் தனது கவனத்தை செலுத்தியுள்ளது என்று அத்திணைக்களம், நேற்று (18) வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

செய்தி அறிக்கைகளின் தன்மை மற்றும் உள்ளடக்கத்தை கருத்தில் கொண்டு, இது தொடர்பான செய்திகளின் அடிப்படையில் மக்கள் தவறாக வழிநடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதை இது காட்டுகிறது என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

யாழில் போதை ஊசிகளால்

## 10 பேர் உயிரிழப்பு; 134 பேருக்கு சிகிச்சை

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பயன்படுத்தி இதுவரையில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன், போதைக்கு அடிமையானவர்களுக்கான யாழ்.போதனா வைத்தியசாலையின் சிகிச்சை மையத்தில் கடந்த இரு மாத கால பகுதிக்குள் 134 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## 2ஆம் எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கு இன்று

### தேசிய துக்க தினம்; அரச விசேட விடுமுறை பிரகடனம்

கடந்த 8ஆம் திகதியன்று மரணமடைந்த பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் (வயது 96) இறுதிச் சடங்கு இலண்டனில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் இன்று (19) இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சி P2

'பொருளாதார தலைவர்கள்'


## ஜனாதிபதி ரணிலுக்கு பட்டியலில் 4ஆம் இடம்

இன்று (19) நடைபெறும் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்குக்காக, இலண்டனுக்குச் செல்லும் முக்கிய பொருளாதாரங்களின் தலைவர்களைக் காட்டும் ஒரு கிரஃபிக் (வரைகலையை) ஏஃப்பி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சித்திரவதை கூடத்திலிருந்து இலங்கை மாணவர்கள் மீட்பு

### உறுதிப்படுத்துமாறு உக்ரைனிடம் கோரிக்கை



ரஷ்யாவின் எல்லைக்கு அருகில் உள்ள கார்கிவ் பகுதி, சமீபத்தில் ரஷ்ய ஆக்கிரமிப்பிலிருந்து உக்ரைன் படைகளால் மீட்கப்பட்ட நிலையில்,

தொடர்ச்சி P2

ஐ.எம்.எஃப் ஒப்பந்தம்

## வெளி கடனாளிகளுக்கு விளக்க இலங்கை முஸ்தீபு

பொருளாதார மீட்சிக்காக சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் அடுத்த படிகள் தொடர்பில், அனைத்து வெளி கடனாளிகளுக்கும் செப்டெம்பர் 23ஆம் திகதியன்று, இலங்கை அரசாங்கம் விளக்கமளிக்கவுள்ளது.

தொடர்ச்சி P2

ஐ.நா 77ஆவது அமர்வில் கலந்து கொள்ள

## அமைச்சர் அலி சப்ரி தலைமையில் குழு

நியூயோர்க்கில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77ஆவது அமர்வில், கலந்து கொள்வதற்கான இலங்கை தூதுக் குழுவுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, தலைமை தாங்கவுள்ளார் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, நேற்று (18) தெரிவித்தது.

தொடர்ச்சி P2



## இலண்டனை சென்றடைந்தார் ஜனாதிபதி ரணில்

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கு இன்று (19) நடைபெறும். அதில், கலந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து புறப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலண்டனை சென்றடைந்துள்ளார்.

அவரை, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலக இந்தோ-பசிபிக் பிராந்திய பணிப்பாளரும் இந்திய பணிப்பாளருமான பென் மெல்லர், பிரித்தானிய மன்னரின் விசேட தூதுவர் பிரதி லெப்டினன்ட் டேவ் ஈஸ்டன் மற்றும் இலங்கையின் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன ஆகியோர் வரவேற்றனர்.



மூன்று நாள்களில்

## தாமரை கோபுரத்தால் ரூ. 7.5 மில். வருமானம்

தாமரை கோபுரம், மக்கள் பார்வைக்கு திறக்கப்பட்டு மூன்று நாள்களுக்குள் 7.5 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளதாக தாமரை கோபுர தனியார் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இலங்கையை இந்தியா ஐ.நாவில் கண்டித்தது ஏன்?

### பின்னணியில் அண்ணாமலை



பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலையிடம், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தியதை தொடர்ந்தே, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில், இலங்கையை இந்தியா கண்டித்ததாக தகவல் வெளியாகி உள்ளது என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## ரஷ்யாவுடனான பேச்சு வார்த்தையில் முன்னேற்றம்

### பந்துல தெரிவிப்பு; மன்னிப்பும் கோரினார்

பொருளாதார மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடியில் இருந்து இலங்கை மெதுவாக மீண்டு வரும் இந்தச் சந்தர்ப்பத்தில், ரஷ்யாவின் ஆதரவை அதிகம் எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன,

தொடர்ச்சி P2

ஐ.நாவில் இந்தியா முன்வைத்த

## 13ஆம் திருத்த சட்ட தீர்வை ஏற்போம்



### தமிழ் தலைமைகளுக்கு துரைரெட்ணம் அழைப்பு

■ கனகராசா சரவணன்

இலங்கையின் சிறுபான்மை தமிழ் மக்கள் தொடர்பாக ஜெனீவாவில், இந்தியா முன்வைத்த 13ஆவது திருத்தச் சட்ட தீர்வுத் திட்டத்தை அனைத்து தமிழ் தலைமைகளும் ஏற்றுக் கொண்டு, அதற்கான பணிகள் மற்றும் செயற்றிட்டங்களை அமல்படுத்துவதற்கு உறுதிபூண வேண்டும் என்று, அனைத்து கட்சிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா மன்ற தலைவரும் கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினருமான இரா.துரைரெட்ணம் அழைப்பு விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மஹிந்தவிடம் தலை வணங்கும் ஐ.தே.கவினர்

### காக்கையிடமே வேட்புமனு பெற வேண்டும் என்கிறார் சஜித்



ஐக்கிய தேசிய கட்சியின் சில உறுப்பினர்களுக்கு, மஹிந்த ராஜபக்ஷவிடம் சென்று தத்தமது துக்கங்களைக் கூறி தலைவணங்க நேரிட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நேற்று (18) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## விவசாய நிலங்கள்...

குருந்தூர் மலைப்பகுதியை சூழவுள்ள பகுதிகளில் உள்ள பொது மக்களின் பல ஏக்கர் விவசாய நிலங்கள், தொல்பொருள் திணைக்களத்தால் கடந்த வாரம் எல்லையிடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர், “குருந்தூர் மலைப்பகுதியில் நீதிமன்ற கட்டளைகளையும் மீறி தற்போது விகாரை அமைக்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

“அத்துடன் கடந்த வாரம் குறித்த பிரதேசத்தில் உள்ள பொதுமக்களுக்கு சொந்தமான விவசாயக் காணிகள், தொல்லியல் திணைக்களத்தால் எல்லையிடப்பட்டுள்ளன.

“குருந்தூர் மலைப்பகுதியில் காணப்படும் 58 காணி, குளம் உள்ளிட்ட 78 ஏக்கர் வரையான காணிகளும் தொல்லியல் திணைக்களத்தால் ஆய்வுக்குரிய பகுதிகளாகவும் அதேபோல, தண்ணிமுறிப்பு பிரதான வீதியின் பழைய தண்ணிமுறிப்பு, குடியிருப்பு பகுதி, நாகசோலை காட்டுப்பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய 320 ஏக்கர் விவசாயக் காணிகளும் மேலதிகமாக சுவீகரிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

“இவ்வாறு தமிழர்களுடைய பூர்வீக நிலங்கள் தொடர்ச்சியாக தொல்லியல் திணைக்களத்தாலும் வனவளத் திணைக்களத்தாலும் அடையாளப்படுத்தப்பட்டு, ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

“இது, அந்த மக்களினுடைய வாழ்வாதாரத்தை பறிக்கும் ஒரு செயலாகவே அமைந்திருக்கின்றது” என்றார்.

## வெளி கடனாளிகளுக்கு விளக்க இலங்கை முஸ்தீபு

இந்த தெளிவூட்டல் ஒன்லைன் மூலம் இடம்பெறவுள்ளதாக கடன் மறுசீரமைப்பு ஆலோசகர் நிறுவனமான கிளிஃபோர்ட் சான்ஸ், சனிக்கிழமை (17) வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அண்மைய பொருளாதார முன்னேற்றங்கள், நாணய நிதிய பொதியின் நோக்கங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் அடுத்த படிகள் குறித்து கடன் வழங்குநர்களுக்கு இலங்கை நிதியமைச்சு விளக்கமளிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் சுமார் 2.9 பில்லியன் டொலர் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 48 மாத ஏற்பாட்டுடன் இலங்கையின் பொருளாதார கொள்கைகளை ஆதரிப்பதற்கான பணியாளர் மட்ட உடன்பாடு, கடந்த முதலாம் திகதி எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யாவுடனான...

கடன் பெறுவது தொடர்பான பேச்சுவார்த்தையில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதாக தெரிவித்தார்.

இலங்கையின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன, ரஷ்யாவின் ‘ஸ்புட்னிக் செய்திச் சேவை’க்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே இந்த விடயத்தைக் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய கட்டண முறையான எம்ஐஆர் உடன் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இலங்கை அதிகாரிகள், மொஸ்கோவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் இரு நாடுகளினதும் மத்திய வங்கிகளுக்கிடையில் கலந்துரையாடல் இடம்பெற்று வருவதாகவும், மத்திய வங்கியின் அனுமதியை பெற்ற பின்னர் அதை அறிவிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

விசா மற்றும் மாஸ்டர்காட் செயற்பாடுகள், மார்ச் ஆறாம் திகதி, ரஷ்யாவில் நிறுத்தப்பட்ட நிலையில், ரஷ்ய சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தரும் போது, எம்ஐஆர் அட்டை மூலம் பணம் செலுத்த முடியும் என்றார்.

மேலும், ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்வதற்கும், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கும் இலங்கைக்கு கடனுதவி வழங்குமாறு, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினிடம் கோரிக்கை விடுத்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, நீதிமன்ற உத்தரவின் பேரில் ரஷ்யாவின் ஏரோஃப்ளோட் விமானம் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை துரதிர்ஷ்டவசமான சம்பவம் என்றும் அதற்கு மன்னிப்புக் கோருவதாகவும் ரஷ்யாவின் ‘ரியா நோவஸ்டி’ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், அமைச்சர் தெரிவித்ததாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது. ஒக்டோபர் மாத நடுப்பகுதியில் மொஸ்கோவுக்கும் கொழும்புக்கும் இடையிலான விமான சேவைகள் மீள ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# விஷ அரிசி பொய்

அந்த அறிக்கைகளின் பிரகாரம், “இந்த நாட்டுக்கு மனித நுகர்வுக்காக இறக்குமதி செய்யப்படும் அரிசியில் கன உலோகங்கள் இருப்பதால், சிறுநீரக நோய், புற்றுநோய், குறைந்த எடை மற்றும் 43 சதவீத ஈயம், 26 சதவீதம் காட்மியம் ஆகிய கலந்து இருப்பதால், இவை பல நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றன. இந்த நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் அரிசியில் 20 சதவீதம் பாதரசம், 47 சதவீதம் செலினியம் விஷம் கலந்து உள்ளது” எனக் கூறப்பட்டுள்ளது.

மேற்படி விவகாரங்கள் தொடர்பில், அரசாங்கத் தகவல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்:

1) 2017ஆம் ஆண்டு கண்டியில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் அறிக்கையே, இந்தச் செய்திக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக பூச்சிக் கட்டுப்பாட்டு பதில் பதிவாளர் லசந்த ரத்னவீர உறுதிப்படுத்தியுள்ளார்.

2) பட்டை உலோகம் பொதுவாக பத்தாயிரத்திற்கு ஒரு பங்கு என்ற அடிப்படையில் அளவிடப்படுகிறது. ஆனால், ஊடகங்களில் அது சதவீதத்தில் கொடுக்கப்படுகிறது. பார் மெட்டலை சதவீதத்தில் அளக்கும் முறை உலகில் இல்லை. இதனால் மேற்கண்ட செய்தி பொய்யான செய்தி எனவும் லசந்த ரத்னவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

3) இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து படிப்படியாக மீள்வதற்கான கடினமான செயற்பாட்டில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் இவ்வேளையில், நாட்டை சீர்குலைக்கும் சக்திகளால் இவ்வாறான பொய்யான அறிக்கைகள் செய்திகளாக கசிந்து விடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமல் இருக்க முடியாது என்பதுடன் அந்த செய்தி முற்றிலும் மறுக்கப்பட்டது. எனவே பொறுப்புள்ள ஊடக நிறுவனங்கள், அறியாமல் இத்தகைய பிரிவுகளை ஆதரிக்காது என்பது அரசாங்கத்தின் நம்பிக்கையாகும்.

4) தகவல் அறியும் மக்களின் உரிமை என்பது கொள்கை மட்டுமல்ல, சட்டமும் கூட என்ற உண்மையின் வெளிச்சத்தில், இதுபோன்ற உணர்ச்சிகரமான விடயங்களை அறிக்கையிடும் போது, சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து உரிய தகவல்களை பெற்றுக்கொள்ளவேண்டும்; சரியான ஆதாரங்களுடன் சரியான தகவலைப் பரப்பும் ஊடகம், இதைத் தெளிவுபடுத்த தேவையான இடத்தை வழங்குகிறது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அமைச்சர் அலி சப்ரி...

செப்டம்பர் 20 முதல் 26 வரை நடைபெறவுள்ள உயர்மட்ட அமர்வில், இலங்கையின் அறிக்கையை செப்டெம்பர் 24ஆம் திகதி அமைச்சர் வழங்கவுள்ளார் என்றும் அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது, ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் குறித்த மாநாட்டின் வெளிவிவகார அமைச்சர்களின் சந்திப்பு, குழு 77 மற்றும் சீன உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் ஆகியவற்றில் அவர் உரையாற்றவுள்ளார்.

மேலும், உலகளாவிய அபிவிருத்தி முன்முயற்சியின் நண்பர்கள் குழுவின் அமைச்சர் கூட்டம் மற்றும் அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டம் போன்ற அமைச்சர்கள் மட்டத்திலான பல்வேறு கூட்டங்களில் அவர் உரையாற்றுவார்.

ஐ.நா உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடனும் அவர் இருதரப்புக் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதுடன், நியூயோர்க்கில் உள்ள ஐ.நாவின் உயர் மட்ட அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார்.

இலங்கை தூதுக்குழுவில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, நியூயோர்க்கில் உள்ள ஐ.நா வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி மொஹான் பீரிஸ், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி, நியூயோர்க்கில் உள்ள இலங்கையின் நிரந்தரத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

## 13ஆம் திருத்தச்...

மட்டக்களப்பு வாவிக்கரையில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப், பத்மநாபா மன்ற காரியாலயத்தில் நேற்று (18) இடம்பெற்று ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “வடக்கு கிழக்கில் வாழுகின்ற சிறுபான்மை தமிழ் மக்கள் தொடர்பாக 13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமல்படுத்துங்கள் என்ற தொனியில் ஐ.நாவில் இந்திய அரசாங்கம் முன்வைத்தமை பாராட்டக்கூடியது.

ஜெனீவாவில் இலங்கை தொடர்பாக ஜனநாயகம், பன்மைத்துவம், வன்முறை, அடிப்படை மனித உரிமைகள் மீறல், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தாலும் கூட, இலங்கை சிறுபான்மை மக்கள் குறித்த தீர்வு திட்டத்தை ஐ.நாவில் முதல் முதலில் இந்திய அரசுதான் முன்வைத்தது.

எனவே இதனை வடக்கு, கிழக்கில் வாழுகின்ற தமிழ்க் கட்சிகள் புரிந்துகொண்டு, இதைச் சரியாக அமல்படுத்துவதற்கு சரியான ஒத்துழைப்புகளை நல்கவேண்டும்.

ஐ.நாவில் இந்திய அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு அமல்படுத்தி, மாகாண சபைத் தேர்தல்கள், மாகாண சபை முறைமைகள், அதிகாரப் பரவலாக்கல் போன்ற தமிழ் மக்களுக்குரிய ஆரம்பப் பணிகளை தொடங்குவதற்கு நாங்கள் உறுதிபூண வேண்டும்.

தமிழ் தலைமைகள் ஏற்றுக் கொண்டு அதற்கான கட்டுமானப் பணிகள் மற்றும் செயற்றிட்டங்களை அமல்படுத்துவதற்கு உறுதிபூண அனைத்துக்கட்சிகளுக்கும் அழைப்புவிடுக்கின்றேன்” என்றார்.

## சித்திரவதைக்...

அங்கிருந்து மீட்கப்பட்ட ஏழு இலங்கை மருத்துவ மாணவர்கள் தொடர்பிலான தகவல்களை மேலும் உறுதிப்படுத்துமாறு கோரியுள்ளதாகவும் அங்காராவில் உள்ள தூதரகத்தின் ஊடாக உக்ரேனிய அரசாங்கத்துடன் தொடர்பில் இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது. உக்ரைனில் உள்ள இலங்கை பிரஜைகளின் நலனை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, முன்னுரிமையின் அடிப்படையில் இது தொடர்பான மேலதிக தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளதாகவும் அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரைனின் கார்கிவ் பகுதியில் உள்ள ரஷ்ய படையினரின் சித்திரவதைக் கூடங்களில் இருந்து இலங்கை மாணவர்கள் ஏழு பேர் மீட்கப்பட்டு மருத்துவ சிகிச்சைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று, உக்ரைன் ஜனாதிபதி வோல்டோமிர் செலென்ஸ்கி, சனிக்கிழமை (17) தெரிவித்தாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இலங்கை மாணவர்கள், குப்யான்ஸ்க் மருத்துவக் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், ரஷ்ய இராணுவத்தால் மார்ச் மாதம் அந்தப் பகுதி கைப்பற்றப்பட்டது.

இந்நிலையில், வெளியான இந்தச் செய்தியின் உண்மைத்தன்மையை கண்டறியுமாறும், மேலும் இது தொடர்பான மேலதிக தகவல்களை முன்னுரிமையின் அடிப்படையில் வழங்குமாறும் அமைச்சு, உக்ரேனிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## தாமரை கோபுரத்தால்...

15ஆம் திகதி, கோபுரம் மக்கள் பார்வைக்காக திறக்கப்பட்ட நிலையில், தாமரை கோபுரத்தைப் பார்வையிடுவதற்காக 14,000 பேர் வருகை தந்துள்ளதாக கூறினார்.

மேலும், பிற்பகல் 2 மணிமுதல் இரவு 11 மணிவரை கோபுரத்தை பார்வையிட அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், பார்வையிடுவதற்கான காலம், சனிக்கிழமை (17) முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நண்பகல் 12 மணி முதல் இரவு 11 மணி வரை தாமரை கோபுரத்தை பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இரவு 10 மணி வரை மாத்திரமே அனுமதிச் சீட்டு விநியோகிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மஹிந்தவிடம் தலை வணங்கும்...

கம்பஹா மாவட்ட அத்தனகல்ல ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அநீதி இழைக்கப்பட்ட அனைவருக்கும் தனது கடமைகளை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என தற்போதைய ஜனாதிபதி அப்போது கூறியிருந்த போதும், ஐக்கிய தேசிய கட்சிக்கார்களை குழிதோண்டிப் புதைத்த குற்றவாளிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி இன்று கடமையை நிறைவேற்றி வருவதாக தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதியின் கீழ் ஐக்கிய தேசிய கட்சிக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள தலைவிதி வருந்தத்தக்கது எனவும், தவறாக வழிநடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் எதிர்காலத்தில் நெலும் மாவத்தையிலுள்ள காக்கையிடமிருந்தே வேட்புமனுக்களைப் பெற வேண்டியிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சௌபாக்கியம் மிக்க தேசமொன்றை உருவாக்குவோம் எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டு வந்த அரசாங்கம், போஷாக்கு குறைபாடுகள் நிறைந்த நாட்டைக் கையகப்படுத்தி உள்ளதாகவும், போஷாக்கின்மையால் நாடு தவிக்கும் வேளையில், அரசாங்கம் மிகை ஊட்டச்சத்தால் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தற்போது ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தாலும் அரசாங்கம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளதாகவும் மீண்டும் உதவி வழங்க மாட்டோம் என இந்தியா கூறியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டின் மனித உரிமைகள் உள்ளடங்கலாக ஜனநாயகம் பாதுகாக்கப்படும் வரை எவ்வித உதவியும் வழங்கப் போவதில்லை என சர்வதேச அமைப்புகள் கூட தெரிவித்துள்ளன எனவும் குறிப்பிட்டார்.

முழு நாடும் கடும் நெருக்கடியிலிருக்கும் போது அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் சக நிகழ்வுகளின் போது வானவேடிக்கைகளை நடத்தி வருவதாக தெரிவித்த அவர், தற்போதைய ஜனாதிபதியிடமிருந்தே அவர்கள் அந்தப் பதவிகளைப் பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

## சுவைக்கக் கூடாது

இந்நிலையில், பெரும்பாலான பழக்கடைகளில், திராட்சை உள்ளிட்ட சிறிய ரக பழங்கள் அடங்கிய கூடைகளுக்கு முன்பாக, ‘சுவைத்துப் பார்க்கக் கூடாது’, ‘கொள்வனவுக்கு மட்டும்’ என எழுதப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

## 10 பேர் உயிரிழப்பு; 134...

அத்தோடு, 320 பேர் வரையில் போதைப்பொருட்களுடன் யாழில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களில் பெரும்பாலானோர் 18 வயதுக்கும் 23 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்களே என தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, யாழ்ப்பாணத்தில் அதிக போதைப்பாவனைக்கு உள்ளானவர்கள் வாழும் கிராமமாக சுமார் 20 கிராமங்கள் அடையாளப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் எனவே, யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்லும் இந்தப் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான முறையான வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் முன்வர வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 2ஆம் எலிசபெத் மகாராணியின் இறுதிச்சடங்கு இன்று

அதனையொட்டி, இலங்கையில் இன்றையதினம் தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளதுடன், அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறையும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் மகாராணியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொள்வதற்காக இலண்டன் நகரை சென்றடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

70 வருடங்களாக ஐக்கிய இராச்சியத்தை ஆண்ட இரண்டாம் எலிசபெத் மகாராணி, 14 பொதுநலவாய நாடுகளுக்கும் இராணியாக இருந்துடன், மிக நீண்ட கால ஆட்சியை புரிந்தவர் என்ற பெருமையும் பெற்றுள்ளார்.

## ஜனாதிபதி ரணிலுக்கு பட்டியலில் 4ஆம் இடம்

அதில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 4ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன், ஜப்பானிய பேரரசர் நருஹிடோவுக்கு அடுத்த இடத்தில் ஜனாதிபதி ரணில் பெயரிடப்பட்டுள்ளார்.

## இலங்கையை இந்தியா...

“ஈழத் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்குவதற்காக, இலங்கை அரசியலமைப்பில் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துதல், மாகாண சபைகளுக்கு மேலதிக அதிகாரம், மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்துதல் போன்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில், எந்த முன்னேற்றத்தையும் இலங்கை அரசு எட்டவில்லை” என்று ஜெனீவாவில் கடந்த 12 ஆம் திகதி உரையாற்றிய இந்திய பிரதிநிதி குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஒருபோதும் ஆதரிக்காத, பா.ஜ.க ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு என்பதை வலியுறுத்தி வந்த பின்னணியில், ஐ.நாவில் இலங்கையை இந்தியா கண்டித்துள்ளது.

“ஒருங்கிணைந்த இலங்கைக்குள், தமிழர்களுக்கு நீதி, அமைதி, சமத்துவம் மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பதே, இந்தியாவின் நிலைப்பாடு. இதை இலங்கை உறுதி செய்ய வேண்டும்” என்று, கண்டிப்புடன் இந்திய பிரதிநிதி குறிப்பிட்டிருந்தார்.

மத்திய பா.ஜ.க, அரசாங்கத்தின் இந்தக் கண்டிப்பு பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளதுடன், இலங்கையை சீனா ஆதரிப்பதால் தான், இந்தியா தன் நிலைப்பாட்டை மாற்றியதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. எனினும், ஐ.நாவில் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை எதிர்க்கட்சிகளும் வரவேற்றுள்ளன.

ஏப்ரல் 30 ஆம் திகதி, இலங்கைக்கு பயணம் மேற்கொண்ட அண்ணாமலை, மே 1 இல் நுவரெலியாவில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நடத்திய உழைப்பாளர் தின கொண்டாட்டத்தில் பங்கேற்றார்.

அங்கு பேசிய அவர், “இராமருக்கு பாலம் கட்ட அணில் உதவியது போல, நானும், என் இரத்தத்தின் இரத்தமான இலங்கை தமிழர்களுக்கு உதவி செய்ய நினைக்கிறேன். இன்றைய இந்தியா, மோடியின் வல்லரசு இந்தியா. இலங்கை மக்களை இந்தியா ஒருபோதும் கைவிடாது. உங்களின் துயரங்கள் அனைத்தும் விரைவில் விடுபடும்” என்றார்.

இலங்கை பயணம் குறித்த விரிவான அறிக்கையை, அமித்ஷா, பா.ஜ.க, தேசிய தலைவர் நட்டாவிடம் அண்ணாமலை வழங்கியிருந்தார்.

இந்நிலையில், ஐ.நா பேரவையில் இலங்கை பற்றிய விவாதம் நடப்பதையொட்டி, தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலையிடம் ஆலோசிக்குமாறு, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரிடம், பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் கூறியுள்ளனர்.

அதன்படி, தன்னிடம் ஆலோசித்த ஜெய்சங்கரிடம், “விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாத நிலையில், நாம் முழுமையாக தமிழர்கள் பக்கம் நிற்பது தான் சரியானது. இலங்கை தமிழர்கள் மோடியை தான் நம்பியுள்ளனர். எனவே, 13ஆவது சட்டத்திருத்தத்தை அமல்படுத்துதல், மாகாணங்களுக்கு தேர்தல் நடத்தி அரசியல் அதிகாரம் வழங்குதல் போன்ற அடிப்படையான கோரிக்கைகளை, இந்தியா வலியுறுத்த வேண்டும். இதைத் தான் தமிழக மக்களும் விரும்புகின்றனர்” என அண்ணாமலை கூறியுள்ளார்.

அதைத் தொடர்ந்தே, “கொடுத்த வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை” என ஐ.நாவில் கண்டித்ததுடன், “இலங்கை தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம், சமநீதி, சமத்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும்” என இந்தியா வலியுறுத்தியுள்ளது என்றும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# ‘திலீபன் வழியில் வருகின்றோம்’

## முல்லைத்தீவை வந்தடைந்த ஊர்தி

■ சண்முகம் தவசீலன்

‘திலீபன் வழியில் வருகின்றோம்’ என்ற ஊர்தி பவனி, முல்லைத்தீவு நகரை நேற்று (18) வந்தடைந்தது.

பொத்துவில் பிரதேசத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கடந்த 15ஆம் திகதி ஆரம்பித்த ஊர்தி பவனியே, முல்லைத்தீவு நகரை வந்தடைந்தது.

இதன்போது முல்லைத்தீவு பகுதியை சேர்ந்த மக்கள், மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.



மெகசின் சிறைச்சாலையில் கைதிகளின்

# உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

■ வி.நிதர்ஷன்

தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, மெகசின் சிறைச்சாலையில் கடந்த சில நாள்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த கைதிகள், நேற்று (18) உண்ணாவிரதத்தை கைவிட்டுள்ளனர் என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

மெகசின் சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் (17) முற்பகல் சென்று, கைதிகளுடன் கலந்துரையாடி, அவர்களுக்கு வழங்கிய உறுதி மொழியை அடுத்து, கைதிகள் உண்ணாவிரதத்தை கைவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.



பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள 13 கைதிகளே, தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, கடந்த ஆறாம் திகதி மாலை முதல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்தனர்.

அத்துடன், வட மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக, கைதிகளின் உறவினர்களும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், அவர்களும் தங்களுடைய போராட்டத்தையும் கைவிடுவதாக தெரிவித்தனர்.

# பதில் அமைச்சர்கள் ஐவர் நியமனம்

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலண்டன் சென்றுள்ள நிலையில், தான் நாடு திரும்பும்வரை, தனக்கு கீழ் உள்ள அமைச்சுகளின் இராஜாங்க அமைச்சர்களை பதில் அமைச்சர்களாக நியமித்துள்ளார்.

இதன்படி, பாதுகாப்பு பதில் அமைச்சராக பிரமித்த பண்டார தென்னகோன், நிதி, பொருளாதார, ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகளின் பதில் அமைச்சராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக கீதா குமாரசிங்க, தொழில்நுட்ப பதில் அமைச்சராக கனக ஹேரத், முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சராக திலும் அமுனுகம ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலண்டனில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் இன்று (19) இடம்பெறவுள்ள இறுதிச் சடங்கில் பங்கேற்கவுள்ள ஜனாதிபதி, எதிர்வரும் புதன்கிழமை (21) அதிகாலை நாடு திரும்பவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து



புறப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று முன்தினம் (17) நண்பகல் இலண்டனை சென்றடைந்தார்.

இலண்டன் சென்றடைந்த ஜனாதிபதியை பொதுநலவாய, மேம்பாட்டு அலுவலகத்தின் இந்து-பசிபிக் பிராந்திய பணிப்பாளர் மற்றும் இந்தியாவுக்கன பணிப்பாளர் பென் மெல்லர், பிரித்தானிய இளவரசரின் விசேட பிரதிநிதி உப லெப்டினன்ட் டேவ் ஈஸ்டன், பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன ஆகியோர் வரவேற்றனர்.

இதேவேளை, நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் இருந்த மூன்று நிறுவனங்கள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டு உள்ளதாக ஜனாதிபதியின் கையொப்பத்துடன், வெள்ளிக்கிழமை (16) வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சின் கீழ் இருந்த முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு ஆகியவை முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன என்று குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காதலியிடம் பறக்க முயன்ற இளம் பிக்குவுக்கு சிக்கல்

■ எம்.இஸட் ஷாஜஹான்

சீதுவை, நந்தாராம விஹாரையின் விஹாராதிபதி நெதகமுவ மஹாநாம படுகொலை சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபரான இளம் பிக்குவை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறையில் வைக்குமாறு நீர்கொழும்பு மேலதிக நீதவான் மிலான் ஜயசூரிய நேற்று (17) சனிக்கிழமை உத்தரவிட்டார். ஏக்கல சுகந்தசிறி (வயது 18) என்பவரே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்ட சந்தேக நபராவார்.சீதுவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனுஷ்க பண்டாரவின் வழிகாட்டலின் கீழ், குற்றத்தடுப்பு பிரிவினர் சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

அவர், விஹாராதிபதியை கொலை செய்துவிட்டு, விஹாரையில் இருந்த பெறுமதியான இரண்டு வாகனங்களை விற்றுவிட்டு, டுபாயில் உள்ள தனது காதலியிடம் செல்வதற்கு முயன்ற போதே, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பிக்கு கைது செய்யப்பட்ட போது, அவர் அனைத்து சோதனைகளையும் முடித்துக் கொண்டு விமானத்தில் ஏறுவதற்காகக் காத்திருந்ததாகவும், சம்பந்தப்பட்ட குடிவரவு அதிகாரி அவரைச் சோதனை செய்யாவிட்டால், அவர் நாட்டை விட்டு ஓடியிருப்பார் என்றும் அந்த அதிகாரி கூறினார்.

அந்தப் பிக்குவுக்கு எதிராக குடிவரவு தகவல் அமைப்பில் விசேட பதிவு ஏதும் இல்லாததால், குடிவரவு நடைமுறைகளை முடித்து விட்டு பிக்குவை அனுப்பி வைத்ததாகவும், விஹாராதிபதி நெதகமுவ மஹாநாம மரணம் குறித்து கேட்ட போது, தனக்கு எதுவுமே தெரியாது என்பதை போல பிக்கு நடந்துகொண்டுள்ளார்.

அங்கிருந்து பிக்குச் சென்ற 10 நிமிடங்களின் பின்னர், அவர் சீதுவை பிர தேசத்தை சேர்ந்தவர் என்பதால், தங்களின் பொறுப்பின் கீழ் கொண்டுவந்து விசாரித்துள்ளனர். அதன்பின்னர் கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். அந்த பிக்கு, அதிகாலை 3.30க்கு புறப்படவிருந்த விமானத்தில் ஏறுவறத்காக, இரவு 11.30 மணிக்கே வந்துவிட்டார் என்பதுடன், சந்தேகநபரான அந்தப் பிக்கு, கட்டுநாயக்க பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

தேசத்திற்கு பெருமை சேர்த்த விளையாட்டு வீரர்கள்

# கௌரவிக்கப்பட்ட உன்னதமான நிகழ்வு

இது செம்பியன்கள் உருவாகின்ற காலப் பருவமாகும். அதிலும் இலங்கை விளையாட்டுத்துறையின் வசந்தகாலமாகும். மீண்டெழ போராடும் ஒரு தேசத்திற்கு தேவையான மன உத்வேகத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் நமது விளையாட்டு வீரர்கள் வெற்றிக்கு மேல் வெற்றிகளைப் பெற்றுள்ளமை இந்நாட்டின் விளையாட்டுத்துறை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் எழுதப்படுகின்ற ஓர் அத்தியாயமாக இது அமைந்துள்ளமை மறுக்க முடியாதது.

அடைந்த வெற்றிகளை மேலும் முன்னோக்கி கொண்டு செல்வதுடன் நாட்டினதும், விளையாட்டினதும் வெற்றிகளை ஈட்டக்கூடிய திறன் கொண்டவர்களுக்கு போதிய உத்வேகத்தை அளிக்க வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும், அதற்கான கௌரவத்தை அளிக்க வேண்டிய தருணமும் இதுவேயாகும்.

அதற்கமைய ஜனாதிபதி செயலகம், விளையாட்டுத்துறை அமைச்சு, இலங்கை கிரிக்கட் நிறுவனம், இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனம், சினமன் லேக்சைட் ஆகியன, இலங்கையின் விளையாட்டுத்துறையோடு வெற்றியிலும் தோல்வியிலும் என்றென்றும் உறுதுணையாக இருந்து, அனுசரணைகள் மூலம் ஆதரவளித்த டயலொக் ஆசியா ஆட்டா நிறுவனத்துடன் இணைந்து கடந்த செப்டெம்பர் 17ஆம் திகதியன்று சினமன் லேக்சைட் ஹோட்டல் வளாகத்தில் விளையாட்டுத்துறை வெற்றியாளர்களை கௌரவிப்பதற்கான விழாவொன்றை ஏற்பாடு செய்திருந்தன.



தேசிய கிரிக்கெட் அணியை கௌரவிக்குமுகமாக கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் நடைப்பெற்ற விழாவின்போது இலங்கை T 20 அணியின் தலைவர் தசுன் ஷானக்க ( 2022 ஆசிய வெற்றிக் கிண்ணத்துடன் ) உட்பட தேசிய கிரிக்கெட் அணியினர், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ ரொஷான் ரணசிங்ஹ, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ, டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுப்புன் வீரசிங்ஹ ஆகியோரை காணலாம்.




கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் தேசிய வலைப்பந்து அணிக்கு கௌரவிப்பு வழங்கப்பட்ட சந்தர்ப்பம். தேசிய வலைப்பந்து அணியின் தலைவி கயஞ்சலி அமரவங்ச (ஆசிய வலைப்பந்து வெற்றிக் கிண்ணத்துடன் ) உட்பட தேசிய வலைப்பந்து அணியினர் , இலங்கை வலைப்பந்து சம்மேளனத்தின் தலைவர் விக்டோரியா லக்ஷ்மி, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ ரொஷான் ரணசிங்ஹ, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ, டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுப்புன் வீரசிங்ஹ ஆகியோரை காணலாம்.

இதன்படி, கடந்த செப்டெம்பர் 11ஆம் திகதி நாட்டின் விளையாட்டுத் துறையில் வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாக அமை யும் வகையில் டுபாய் சர்வதேச மைதானத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி ஆசிய கிண்ண கிரிக்கெட் செம்பியனாகிய தசுன் ஷானக்க தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணியினரும், சிங்கப்பூரில் சிங்கப்பூரை வீழ்த்தி ஆசிய வலைப்பந்து செம்பியனாகிய கயஞ்சலி அமரவன்ச தலைமையிலான நமது தேசிய வலைப்பந்து அணியினரும் , கடந்த பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு

பரா போட்டிகளில் தட்டெறிதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற பாலித்த பண்டார, 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற யுப்புன் அபேகோன், மல்யுத்த போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற நெத்மி அஹிங்சா மற்றும் பளுதூக்குதல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற இசுரு திலங்க ஆகியோர் சர்வதேச அளவில் இலங்கையின் வெற்றிச் சாதனைகளை பதிவு செய்தமைக்காக அவர்களை கௌரவிக்குமுகமாக இலங்கையின் முதல் குடிமகனான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையிலான மேற்படி கௌரவிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, விளையாட்டுத்துறை அமைச்சர் கௌரவ ரொஷான் ரணசிங்க உட்பட விளையாட்டுத்துறை அமைச்சின் அதிகாரிகள், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா மற்றும் அதன் அதிகாரிகள், தேசிய வலைப்பந்து சம்மேளனத்தின் தலைவர் விக்டோரியா லக்ஷ்மி உட்பட அச்சம்மேளனத்தின் அதிகாரிகள் ஆகியோருடன் இலங்கை தேசிய கிரிக்கட் அணிக்கு தொடர்ச்சியாக 9 வருடங்களாக அனுசரணை வழங்கி வருவதுடன், இலங்கை வலைப்பந்து அணிக்கும் 4 வருடங்களாக அனுசரணை வழங்கி வருவதுடன் விளையாட்டுத்துறைக்கு ஊக்கத்தையும் அளித்து வருகின்ற டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி அவர்கள், “ஆப்கானிஸ்தானுடனான போட்டியை தோல்வியுடன் ஆரம்பித்து பின்னர் ஆசியாவை முழுவதுமாக தோற்கடித்து தொடங்கிய பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நமது கிரிக்கெட் வீரர்கள் வெளிப்படுத்திய பாடம், கஷ்டங்களுக்கு மத்தியிலும் நமது தேசிய வலைப்பந்தாட்ட அணி பெற்ற வெற்றி மற்றும் பொதுநலவாய விளையாட்டுக்களில் நமது வீரர், வீராங்கனைகள் பெற்ற வெற்றி ஆகியன மூலம் வெளிப்படுத்தப்பட்ட எடுத்துக்காட்டுகள் ஆகியன ஒட்டுமொத்த தேசத்திற்கே உரிய முன்னுதாரணமாக அனைவரும் எடுத்துக்கொள்ள வேண்டும் “ என குறிப்பிட்டார்.

மேலும், இவ்விழாவில் ஆசியா உட்பட பொதுநலவாய நாடுகளின் பிராந்தியத்தில் பதக்கம் வென்றவர்கள் நினைவுக் கேடயங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, இந்நிகழ்விற்கு மனிதாபிமான ரீதியிலான உன்னதமான ஒரு மதிப்பை ஏற்படுத்தும் வகையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மஹரகம அபேக்ஷா மருத்துவமனைக்கு அத்தியாவசியமான மருந்துகளுக்காக 5 இலட்சம் அமெரிக்க டொலர்களை இந்நிகழ்வின்போது நன்கொடையாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டின்மூலம் நாட்டிற்கு ஓர் உத்வேகத்தை அளித்த அனைத்து விளையாட்டு வீரர்களும் ஒரே மேடையில் இவ்வாறு பாராட்டி கௌரவிக்கப்பட்ட அதேவேளை ஆடல், பாடல், நடனம் என வண்ணமயமான ஓர் இரவாக இது அமைந்ததுடன், நாட்டின் எதிர்கால சாதனைகளுக்குத் தேவையான தைரியத்தையும் வலிமையையும் ஆற்றலையும் புகுத்திய ஓர் அழகான தருணமாகவும் இது அமைந்தது.

டயலொக் ஆசி ஆட்டா நிறுவனம் தேசிய கரப்பந்து மற்றும் ஈஸ்போர்ட்ஸ் அணிகளுக்கு உத்தியோகபூர்வ அனுசரணை வழங்குவதுடன், ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்து போட்டிகள், தேசிய ஜூனியர் மற்றும் சிரேஷ்ட வலைப்பந்து போட்டிகள், பாடசாலை ரக்பி, இராணுவ பரா விளையாட்டு போட்டிகள், தேசிய பரா விளையாட்டு போட்டிகள், உலக பராலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்கின்ற இலங்கை பரா அணி ஆகியனவற்றிற்கும் அனுசரணை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் முறையை மாற்ற முஸ்தீபுகள்:

# மீளாய்வு செய்யவும்

## ஜனாதிபதியிடம் ஹக்கீம் எம்.பி கோரிக்கை

எம்.எஸ்.எம். ஹனீபா

தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முஸ்தீபுகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீளாய்வு செய்ய வேண்டுமென, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

உள்ளூர் மேம்படுத்தல் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஒலுவில் புதிய பொது நூலக கட்டடம், நேற்று முன்தினம் (17) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு



உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "நாட்டில் நல்லதொரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. இனி ஒருபோதும் நாட்டில், இனவாதம் தலை தூக்கமாட்டாது என நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

"அம்பாறை மாவட்டத்தில் மூன்று சமூகங்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் காலகட்டத்தில், சில இனவாதிகள் இனமுறுகல்களை ஏற்படுத்துவதற்கு எத்தனித்து வருகின்றார்கள். இதனை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முறியடித்து, சுமூகமான நிலையை ஏற்படுத்தி வருகின்றது.

"ஒலுவில் துறைமுக நிர்மாணிப்பால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

"ஒலுவில் துறைமுகத்தை துறைமுக அதிகார சபையினர் மீன்பிடித் துறைமுகமாக மாற்றி, மீன்பிடித் துறைமுக திணைக்களத்துக்கு ஒப்படைத்துள்ளனர். இதில் தனியாருக்கு தொழிற்சாலை அமைப்பதற்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. இதனை மீளாய்வு செய்ய வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளோம்" என்றார்.

ஒரே சூலில் நான்கு சிசுக்களை பிரசவித்த

## தாய்க்கு நிதியுதவி





ஏ.எச்.ஏ. ஹுஸைன்

ஒரே சூலில் நான்கு சிசுக்களைப் பிரசவித்த தாய்க்கு, தியாகி அறக்கொடை நிதியத்தின் ஸ்தாபகத் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன், சிசுக்களின் பராமரிப்புக்காக ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கியுள்ளார். கல்குடா மீடியா போரம் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம். பாரிஸ் மூலம் தாயிடம் இந்த நிதியுதவி வழங்கிவைக்கப்பட்டது.

புத்தளம், கல்பிட்டி, ஹுசைனிய்யா புரத்தை சேர்ந்த 24 வயதான இளம் தாய், கடந்த மாதம் 27ஆம் திகதி ஓர் ஆண், மூன்று பெண் என நான்கு சிசுக்களை ஒரே சூலில் பிரசவித்திருந்தார்.

அக்குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்தில்கொண்டு, நாடளாவிய ரீதியில் இன, மத வேறுபாடின்றி பல்வேறு மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் தியாகி அறக்கொடை நிதியம் உதவ முன்வந்து, மேற்படி ஒரு இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளது.

எழுத்தாளர் செயலமர்வு:

## சாகித்திய விழா



ஹஸ்பர்

கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மூதூர், கிண்ணியா, வெருகல் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட எழுத்தாளர்களுக்கான ஒன்றுகூடல் செயலமர்வும், பிரதேச சாகித்திய விழாவும் சேனையூர் அனாமிகா பண்பாட்டு மையத்தில் நேற்று (18) நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமை விருந்தினராக கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சரண்யா சுதர்சன், முதன்மை விருந்தினராக இரா. இரத்தினசிங்கம், மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ அரூஸ், அனாமிகா பண்பாட்டு மைய பணிப்பாளர் பேராசிரியர் பாலசுகுமார், தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அஷ்ரப் ஆகியோர் கலந்துகொண்டனர். கலை, கலாசார நிகழ்வுகளும் இதன்போது அரங்கேற்றப்பட்டன.





விடுதலைப் புலிகளின் கடற்படை

## முகாம் இருந்த இடத்தில் வெடிபொருட்கள் மீட்பு

ஆர்.ஜெயஸ்ரீராம், கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வாகரை பிரதேசத்தின் கதிரவெளி கடற்கரையில் வெடிபொருட்கள் சிலவற்றை வெள்ளிக்கிழமை (16) மீட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

யுத்த காலத்தின் போது, காளி கோவில் வீதி, கதிரவெளி கடற்கரையில் விடுதலைப் புலிகளின் கடற்படை முகாம் அமைந்திருந்த இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள், மகசின் மற்றும் வெடிபொருட்களே தமக்கு கிடைத்த தகவலுக்கமைய மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைக்குண்டு-01, பறா-01,



மிதிவெடி-01, தோட்டக்கள் போடும் பட்டி -100, தோட்டக்கள் - 800, ரி56 ரக துப்பாக்கி ரவைக் கூடு-14, 0.5 ரக தோட்டக்கள் - 76 என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

குறித்த கடற்கரை பிரதேசத்தில் வெடிபொருட்கள் இருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்து, அவற்றை மீட்கும் முகமாக வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்ற அனுமதியை வாகரை பொலிஸார் நாடியிருந்தனர்.

அதன் பொருட்டு, நீதிமன்றம் வழங்கிய அனுமதியின் பிரகாரம், நீதிபதி ரி.கருணாகரன் முன்னிலையில், வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.டி.டி நிலங்க, வாகரை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகதே மஹிந்த விஜயவர்த்தன, விசேட அதிரடிப்படையின் குண்டு செயல் இழக்கும் பிரிவினர் சகிதம் அடையாளம் காணப்பட்ட இடத்தில் மேற்படி பொருட்கள் ஜே.சி.பி இயந்திரத்தின் உதவியுடன் மீட்கப்பட்டன.

திருகோணமலையில்

## கரையோர பாதுகாப்பு வாரம் முன்னெடுப்பு

ஒலுமுதீன் கியாஸ் ஷாபி

திருகோணமலை நகரில் கரையோர சூழல் பாதுகாப்பு வாரம் நேற்று முன்தினம் (17) முதல் எதிர்வரும் 23ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கான ஏற்பாட்டை, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மேற்கொண்டுள்ளதாக அதன் முகாமையாளர் திருநாவுக்கரசு சிறிபதி தெரிவித்தார்.

இதன்படி, திருக்கோணேஸ்வரத்துக்கு நுழையும் பகுதியில் உள்ள மான் பார்க் கடற்கரையில் சிரமதானப் பணி நடைபெற்றது. இதில் சுமார் 60 இற்கும் அதிகமான கடற்படை வீரர்கள் முதற்கட்டமாக பங்கு கொண்டனர்.

இந்நடவடிக்கை தொடர்ந்து எதிர்வரும் 23ஆம் திகதி வரை



இடம்பெறவுள்ளதாக, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் முகாமையாளர் தெரிவித்தார்.

இதற்கான அனுசரணையை இளைஞர் அபிவிருத்தி அகம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருக்கோணேஸ்வரத்துக்கு

# யாழில் இருந்து யாத்திரை

## கோவில் நிலம் ஆக்கிரமிப்புக்கான முதல் எதிர்ப்பு நடவடிக்கை

எம்.றொசாந்த்

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் கோவில் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தும் நோக்கில், யாழ்ப்பாணத்தில் இருந்து அடியவர்களின் யாத்திரை நேற்று முன்தினம் (17) இரவு ஆரம்பிக்கப்பட்டது.

செப்டெம்பர் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் உள்ள இந்து மாமன்றனத்தின் அலுவலகத்தில், நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் ஒன்றுகூடிய சைவ அமைப்புகளின்



பிரதிநிதிகள் எடுத்த தீர்மானத்துக்கு அமைய, இந்த யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

ஈழத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க, தேவாரப் பாடல் பெற்ற தலமான திருக்கோணேஸ்வரம் கோவில் நிலம் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதைத் தடுக்கும் நோக்கிலான முதல் நடவடிக்கையாக இந்த யாத்திரை முன்னெடுக்கப்படுகிறது.

தமக்கு வழங்கப்பட இருந்த காணி

## தனியாருக்கு ஒப்படைப்பு

### ஜெயபுரம் மக்கள் குற்றச்சாட்டு



மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலக பிரிவுகுட்பட்ட ஜெயபுரம் கிராமத்தைச் சேர்ந்த 27 பேருக்கு தலா ஓர் ஏக்கர் வீதம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட காணியை, தனியார் ஒருவருக்கு வன வளத் திணைக்களம் வழங்கியுள்ளதாக ஜெயபுரம் கிராம மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.


இது தொடர்பில் தெரியவருவதாவது: ஜெயபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஆரம்ப குடிகள் 138 பேருக்கு தேவன்குளத்தின கீழ், தலா ஏக்கர் வீதம் ஒருபோகம் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற காணிகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

குறித்த 138 ஏக்கர் காணிக்குள் 30 ஏக்கர் தனியார் ஒருவரின் காணியும் உள்ளடங்கியிருந்தது.

எனவே, அதற்கு மாற்று ஏற்பாடாக ஜெயபுரம் வடக்கு கிராம அலுவலர் பிரிவில், பழைய வன்னேரிக்குளம் வீதியில் 30 ஏக்கர் காணி, பூநகரி பிரதேச செயலகம் மற்றும் வனவள திணைக்கள உயரதிகாரிகளால் அடையாளப்படுத்தப்பட்டது.

எனினும், தமக்கு வழங்க வேண்டிய காணியை, மாவட்ட வனவளத் திணைக்களம் தனியார் ஒருவருக்கு வழங்கியுள்ளது. அவரிடம் குறித்த 30 ஏக்கர் காணிக்கான ஆவணங்கள் இருப்பதாகத் தெரிவித்தே காணியை தனியாருக்கு வழங்கியதாக வனவளத் திணைக்களம் தெரிவித்துள்ளது என ஜெயபுரம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பூநகரி பிரதேச செயலகத்திடம் வினவிய போது, குறித்த 30 ஏக்கர் காணியை மாவட்ட வனவளத் திணைக்களம் தனியார் ஒருவருக்கு வழங்கியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு, அவர் 30 ஏக்கர் காணியையும் துப்புரவு செய்துள்ளமையும் தெரியவந்துள்ளது.


General Telephone 021-2060805
General Fax 021-2060803
பிரதேச செயலகம் - பூநகரி
Divisional Secretariat -Poonakary
Address - Main Street, Vadiyadi, Poonak
E-mail agapoonakary@gmail.co
My No KN/PNY/DS/LB/08
Your No
Date 08.09.2022

மாவட்ட வனவள அதிகாரி,
மாவட்ட வனபரிபாலனத் திணைக்களம்,
கிளிநொச்சி.

தகவல் அறியும் சட்டம் தொடர்பானது

மேற்படி விடயம் தொடர்பாக, தமிழ்ச்செல்வன் முருகையா என்பவரினால் கோரப்பட்ட தகவல் அறியும் சட்டம் தொடர்பானது. (தகவல் பெறுவதற்கான விண்ணப்பம் இணைக்கப்படுகிறது.)
ஜெயபுரம் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் பழைய வன்னேரி...
அமைந்துள்ள பகுதியிலுள்ள ...

# 'பண்டாரவெளி வரலாறும் வாழ்வியலும்'

### நூல் வெளியீடு





எழுத்தாளர் சாஹுல் ஹமீட் கலீலுல் ரஹ்மான் எழுதிய 'பண்டாரவெளி வரலாறும் வாழ்வியலும்' எனும் நூல் வெளியீட்டு விழா, மன்னார், பண்டாரவெளி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் (17) மாலை நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் பங்கேற்றிருந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில்

## 178 வேலைத்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டன

சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 196 வேலைத் திட்டங்கள் 2022இல் கிடைத்துள்ள நிலையில், இதுவரை 178 வேலைத் திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களின் செயற்றிட்ட மீளாய்வுக் கூட்டம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அண்மையில் நடைபெற்ற போதே, மேற்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, கிளிநொச்சி மாவட்டத்தில் குறித்த காலப் பகுதியில் 196 வேலைத் திட்டங்கள் கிடைத்துள்ள நிலையில், இதுவரை 178 வேலைத் திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பையும் உற்பத்தியையும் வலுப்படுத்தும் வகையில், வீட்டுத் தோட்டம் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

புலிகளின் புதையலை தேடிய

## அகழ்வு பணிகள் இடைநிறுத்தம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், இருபாலை, டச்சு வீதியில் உள்ள வீடொன்றில் விடுதலைப் புலிகள் அமைப்பினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் புதையலை அகழும் பணிகள், நேற்று முன்தினம் (17) மதியம் 2 மணியுடன் இடைநிறுத்தப்பட்டது.

குறித்த வீட்டில் புலிகளின் புதையல்கள் காணப்படுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரசியத் தகவலின் அடிப்படையில், புதையலை அகழ்வதற்கான அனுமதியை, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் கோரினர்.

நீதிமன்ற அனுமதி கிடைக்கப்பெற்ற நிலையில், யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில், கோப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் சனிக்கிழமை காலை 10 மணி முதல் அகழும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

புதையல் அகழ்வதற்காக கொழும்பில் இருந்து விசேட அணியினர் வந்திருந்த நிலையில்,



அகழ்வு பணிகளுக்காக கனரக வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன.

மதியம் 2 மணி வரையில் அகழ்வு இடம்பெற்ற போதும், எவ்விதமான பொருட்களும் மீட்கப்படாத நிலையில், அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

முன்னதாக, குறித்த வீட்டின் வளாகத்துக்குள் தங்க நகைகள் புதைக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவித்து, ஆறு பேர் அகழ்வுப் பணிக்கு தயாராகிய நிலையில், பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் தகவலின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் இராணுவத்தில் உள்ளவர்களும் அடங்கியிருந்தனர்.

இந்த நிலையிலேயே கோப்பாய் பொலிஸாரால் மேற்படி அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.




## பெண்கள் போராட்டம்

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு ஆகியனவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பஞ்சத்துக்கு எதிரான போராட்டத்தின் உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பு, ஹட்டன் நகரில் நேற்று (18) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தது.
ஹட்டன் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் ஒன்றுகூடியே, இவ்வெதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அவ்வமைப்பினர் முன்னெடுத்திருந்தனர்.
பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள நாட்டு மக்கள் ஒரேயொரு வேளை மட்டுமே சாப்பிட்டு வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், தற்போதைய சூழ்நிலையால் அந்த மக்கள் பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஆகையால், இதற்கான தீர்வுகளை நாட்டின் ஆட்சியாளர்கள் விரைவில் வழங்க வேண்டும் எனவும் பெண்கள் உரிமை அமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

(சுதத் எச்.எம் ஹேவா, ரஞ்சித் ராஜபக்ஷ)



## கௌரவிப்பு

உடபுஸ்ஸலாவை நகரில் இயங்கும் சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தின் சேவையை பாராட்டியும் பொலிஸாரின் கடமைகளைப் பாராட்டியும் கௌரவிக்கப்பட்டது.
உடபுஸ்ஸலாவை நகர வரவேற்ப்பு மண்டபத்தில் சர்வ மத அமைப்பு ஊடாக போதகர் பி. பாலச்சந்திரன் தலைமையில் இந்நிகழ்வு வெள்ளிக்கிழமை (16) இடம்பெற்றது.
எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில், எவ்வித குழப்பங்களும் இன்றி சாரதிகள் மற்றும் பொதுமக்களுக்கு உடபுஸ்ஸலாவை பொலிஸார் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர், ஊழியர்கள் ஆற்றிய சேவையை பாராட்டி இந்தக் கௌரவம் வழங்கப்பட்டது.
இந்நிகழ்வில், மூவின மத குருமார்கள் உட்பட நகர வர்த்தக சங்கத்தினர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.
உடபுஸ்ஸலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எ.பி வசந்த, முகாமையாளர் எ.எம் ஜயசேன, நிலைய உரிமையாளர் நிர்மலா கருணாரத்தின ஆகியோருக்கு சர்வ மத அமைப்பு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தது.

(ஆ. ரமேஸ்)




## கும்பாபிஷேகம்

ஹப்புத்தலை, ஹல்துமுல்லை நீட்வூட் இலக்கம் 2 மேற்பிரிவு தோட்டத்தில், ஸ்ரீ பாலவிநாயகர், மதுரை வீரன் சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வு, கணபதி உபாசகர் விஷ்னு ஸ்ரீ இராம திகணேஸ்வர சர்மா தலைமையில் நடைப்பெற்றது.

(ஆ. ரமேஸ்)

தமிழ்நாட்டு அரசாங்கத்தின் இரண்டாம் கட்ட உதவிகளில்

# முதல் கட்டத்தில் பெற்றால் இரண்டாம் கட்டத்தில் இல்லை

ஆ.ரமேஸ்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, நாட்டு மக்களுக்கு அரிசி உள்ளிட்ட பல அத்தியாவசிய உணவுப் பொருட்களை இரண்டாம் கட்டமாக தமிழ் நாட்டு அரசாங்கம் வழங்கியுள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள தமிழ் நாட்டு அரசின் உணவு பொருட்கள், இலங்கையில் மலையக பெருந்தோட்ட மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இருந்த போதிலும், தோட்டத்தில் தொழில் செய்வோர் மற்றும் தொழில் அற்றவர்களுக்கும் அந்தந்த பகுதி பிரதேச செயலகங்கள் மூலம் தோட்டப்பகுதிகளுக்கு அனுப்பி வைத்து, தோட்ட நிர்வாகத்தின் கீழ் குடும்ப நல அதிகாரிகளால் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

ஆனால், இந்திய அரசாங்கம் முதல் கட்டமாக வழங்கிய உணவு பொருட்களில் அரிசி பத்து கிலோ மாத்திரம் தோட்டத் தொழிலாளர் சமூகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.




நுவரெலியா மாவட்டத்தின் பல தோட்டங்களில் பகிர்ந்தளிக்கப்பட்ட இந்திய அரிசி தொடர்பில் பல்வேறு சர்ச்சைகளும் ஏற்பட்டிருந்தது.

இது இவ்வாறிருக்க இரண்டாம் கட்டமாக இந்திய அரசு வழங்கிய உணவுப் பொருட்களில் அரிசி மாத்திரம் மாவட்ட பிரதேச செயலகத்துக்கு கொண்டுரப்பட்டு அதுவும் தோட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால், இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்ட அரிசியில் முதலாம் கட்டத்தில் அரிசி பெற்றுக்கொண்டவர்களுக்கு வழங்கப்படுவதில்லை எனவும், முதலாம் கட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட அரிசியை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு மாத்திரம் இரண்டாம் கட்டத்தில் அரிசி வழங்கப்படுவதாக தோட்ட குடும்ப நல அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் மீண்டும் தோட்ட மக்களிடையே சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

இருப்பினும் முதலாம் கட்ட அரிசியை பெற்று கொண்டவர்கள் தோட்ட குடும்ப நல அதிகாரியிடம் இது தொடர்பாக வினவிய போது, "நீங்கள் பிரதேச செயலகத்திற்கு சென்று வினவுங்கள்" என பதிலளித்துள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

இதனால் எதிர்பார்த்த உதவி கிடைக்கவில்லை என வெறும் கையுடன் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக நுவரெலியா பிரதேச தோட்ட தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, இது தொடர்பில் தோட்ட தொழிலாளர்களின் தொழிற்சங்க அமைப்புகளின் தலைவர்கள்,அரசியல் தலைமைகள் தலையிட்டு தீர்வை பெற்றுத்தர வேண்டுமென தொழிலாளர்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

## "ஒருவேளை மட்டுமே உணவு உண்கின்றோம்"

ரஞ்சித் ராஜபக்ஷ

வாழ்க்கைச் செலவு அதிகரித்து சென்று கொண்டே இருப்பதால், நாளொன்றுக்கு ஒருவேளை உணவை மட்டுமே உட்கொள்கின்றோம். அந்த உணவிலும் போதியளவான போசாக்கு இல்லாமல் இருக்கின்றது என பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமையால், இரண்டு வேளைகளை வெறும் வயிற்றுடன் கழிக்கின்றோம் எனத் தெரிவித்துள்ள தொழிலாளர்கள், இதனால், பிள்ளைகளும் கடுமையான போசாக்கு பற்றாக்குறைக்கு முகங்கொடுத்துள்ளனர் என்றனர்.

கோதுமை மா உள்ளிட்ட அத்தியாவசியமான உணவுப் பண்டங்களில் விலைகள், விண்ணை எட்டுமளவுக்கு உயர்ந்துவிட்டன. வருமானம் கடுமையாக கீழிறங்கியுள்ளது. கிடைக்கும் வருமானத்தில் பிள்ளைகளுக்கு ஒருவேளை உணவை கொடுத்துவிட்டு, பெரும்பாலான நேரங்களில் முழுப்பட்டியாய் கிடப்பதாகவும் அம்மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிடைக்கும் கிழங்குகளை அவித்து உண்டு பலரும் பசியை போக்கிக் கொள்கின்றனர் எனத் தெரிவித்துள்ள அம்மக்கள், வாழ்க்கைச் செலவை குறைப்பதற்காக அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்குமாறும், வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.



## அரசாங்கம் கடுமையான கவனம் செலுத்த வேண்டும்

சுதத் எச்.எம்.ஹேவா

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரதான உணவுகளில் ஒன்றான ரொட்டியை, அம்மக்கள் உண்ணுவதில்லை. கோதுமை மாவின் விலை அதிகரிப்பால், இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. ஆகையால், அது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. கண்டி கரிடாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை டெஸ்மன் பெரேரா, மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

'பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம்' எனும் தொனிப்பொருளில் ஹட்டனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில், இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உலருணவு பொதிகள் முறையாக விநியோகிக்கப்பட்டதா? எத்தனை பேருக்கு வழங்கப்பட்டன. அரிசி பொதி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அருட்தந்தை, இது தொடர்பில் பெருந்தோட்ட மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட்டுக்கு வந்து 200 வருடங்கள் கடந்துவிட்டன. எனினும், அம்மக்கள் படும் துன்பங்கள், துயரங்கள் பலருக்கு தெரியாது. ஆகையால், அம்மக்களின் துன்பங்களை எடுத்துரைக்கவேண்டும். அம்மக்களுக்கும் தெளிவுப்படுத்த வேண்டும் என்றார்.

## துப்பாக்கியை பறிந்த ஓட்டோ சாரதி கைது

விமல் ஸ்ரீயாமன் ஜயசிங்ஹ

நாவலப்பிட்டி நகர சபைத் தலைவர் அமில பிரியங்கர மற்றும் அவருடைய சாரதியின் மீது, தலங்கம, கொஸ்வத்த சந்திக்கு அண்மையில் வைத்து தாக்குதல் நடத்தி, அவரிடமிருந்த கைத்துப்பாக்கியை அபரித்துச் சென்றார் என்ற குற்றஞ்சாட்டின் கீழ் ஓட்டோவொன்றின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

அபகரித்துச் செல்லப்பட்ட கைத்துப்பாக்கி, சந்தேகநபர் வசிக்கும் வீட்டின் மேல் மாடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

மே ஒன்பதாம் திகதி நகர சபைத் தலைவர் கெப் வாகனத்தில் பயணித்துக்கொண்டிருந்த போது, அந்த வானத்தை நிறுத்தியே, அவ்விருவரையும் தாக்கிவிட்டு, ஐந்து இலட்சம் ரூபாய் பணம் மற்றும் கைத்துப்பாக்கியை சந்தேகநபரான ஓட்டோ சாரதி அபகரித்துச் சென்றுள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தலகம தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட 29 வயதானவர் என்றும் அவர் ஓட்டோ சாரதி என்றும் தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

## மகாராணியால் நடப்பட்டுள்ள இரண்டு நினைவு மரக்கன்றுகள்



ஷேன் செனவிரத்ன

பேராதனை அரச தாவரவியல் பூங்கா உலகப் புகழ்பெற்ற தாவரவியல் பூங்காவாகும். உலகத் தலைவர்கள் இந்தத் தாவரவியல் பூங்காவைப் பார்வையிட விரும்புகின்றனர். அதைப் பார்வையிட்ட பிறகு, ஒரு நினைவு மரமும் நடப்படுகிறது.

பேராதனை அரச தாவரவியல் பூங்காவின் 200ஆவது ஆண்டு நிறைவு இவ்வருடம் கொண்டாடப்படுகின்றது.

நினைவு மரக்கன்றுகளை மன்னர்கள், ராணிகள், இளவரசர்கள், இளவரசிகள் மற்றும் உலகின் பிற ஆட்சியாளர்கள் நாட்டியுள்ளனர்.

பிரிட்டனின் இரண்டாவது எலிசெபத் மகாராணி, ராணியாக முடிசூட்டப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கைக்கு 1954 ஏப்ரல் 20 ஆம் திகதி தனது முதல் விஜயத்தை மேற்கொண்டார். அன்று ராணியால் முதல் மரம் நடப்பட்டது. இவரது பிறந்தநாளுக்கு முந்தைய நாள் இந்த மரம் நடப்பட்டதும் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகும்.

மகாராணி இங்கு 1981 ஒக்டோபர் 24 ஆம் திகதி இரண்டாவது நினைவு மரத்தை நட்டார். பெரிய பிரித்தானியாவின் உதவியுடன் கட்டப்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கத்திற்குச் சென்றபோது அவர் இந்த மரத்தை நட்டார்.

இரண்டாம் எலிசபெத் மகாராணி காலமான போதிலும் அவரால் நாட்டப்பட்ட இந்த நினைவு மரக்கன்றுகள் நாளுக்கு நாள் துளிர்விட்டு வளர்ந்துவருகின்றது.

## அமைப்பாளருக்கு விளக்கமறியல் நீடிப்பு

என். ஆராய்ச்சி

பெண்ணொருவரை படுகொலைச் செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை தொகுதி அமைப்பாளர் லக்ஷ்மன் திஸாநாயக்கவின் விளக்கமறியல் இம்மாதம் 30ஆம் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை, கேகாலை நீதவான் வாசனா நவரத்ன, கடந்த 16 ஆம் திகதி பிறப்பித்தார். அன்றையதினம் ஸ்கைப் தொழில்நுட்பத்தின் ஊடாகவே, அவரை சிறைச்சாலைகள் அதிகாரிகள் ஆஜர்படுத்தினர்.

அத்துடன் கேகாலை ஆதார வைத்தியசாலையில் ஆஜர்படுத்தி, இரத்த மாதிரியை பெற்றுக்கொள்ளுமாறும் நீதவான் கட்டளையிட்டுள்ளார்.

# காலத்தை கடத்தி, சாட்சிகளை மரணிக்கச் செய்யும் ‘காலஅவகாசம்’

யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், பேரிழப்புகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி என்பவற்றைக்கோரி முன்னெடுக்கப்படும் போராட்டங்கள், அழுத்தங்கள் என்பன நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலும், இலங்கைக்கு எதிரான பிரேரணைகள், ஒவ்வொரு முறையும் ஏதோவொரு வகையில் புதுப்பிக்கப்பட்டு கொண்டே செல்கின்றன.

ஆனால், ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் ஏதோ, சாக்குப்போக்குகளைக் கூறி, காலத்தை கடத்திக்கொண்டே செல்கின்றது. குழுக்களை அமைத்து தகவல்களைத் திரட்டும்; ஒருசில பரிந்துரைகளில் ஒரிரு பிரிவுகளை, ஆமை வேகத்தில் அதுவும் அரைவாசிக்கு கால்வாசியை நிறைவேற்றும். அதற்கிடையில் அடுத்தக் கூட்டத்தொடரும் வந்துவிடும்.

முன்னைய பிரேரணையில் ஒருசிலவற்றை நிறைவேற்றிவிட்டோம் என ஐ.நாவுக்கும் சர்வதேசத்துக்கும் கண்ணாமூச்சி காட்டிவிடும் அரசாங்கம், மீண்டும் இழுத்தடித்துக்கொண்டே செல்லும். அதற்கிடையில், உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் உறவினர்களில் பலர், வயது முதிர்ச்சி, நோய்வாய்ப்பட்டு மரணித்துவிடுவர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் பங்கேற்றிருந்தவர்களில் பலர் உயிருடன் இல்லை. அதற்காக, புதுமுகங்கள் அந்தப் போராட்டத்தில் இணைந்துகொண்டமை குறைவாகும். போராட்டங்களை கைவிடுவதன் ஊடாக, ஓங்கி ஒலித்த குரலும் மௌனிக்கும். எனினும், கால அவகாசம் வழங்கப்படுவதால், இருக்கும் ஒருசில சாட்சிகளும் மறைந்துவிடும் இன்றேல்; மறக்கப்பட்டுவிடும் என்பதில் ஐயமில்லை.

மனிதஉரிமைகள் மீறல்கள், காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட பல குழுக்களால் சமர்பிக்கப்பட்ட யோசனைகள் மற்றும் பரிந்துரைகளை எந்த அரசாங்கமும் முழுமையாக நிறைவேற்றவில்லை. அரசாங்கம் மாறிவிடுமாயின், புதிய அரசாங்கமும் அதே விவகாரங்களுக்காக மீண்டும், மீண்டும் குழுக்களை நிறுவும்.

பழைய பல்லவியைப் போல், அக்குழுக்களும் பாதிக்கப்பட்டோரிடம் முதலில் இருந்து வாக்குமூலங்களை பெற்று தகவல்களைத் திரட்டும். தங்களுடைய உறவினர்களை இழந்தவர்கள், கதறியழுது சாட்சியமளித்ததில் அவர்களின் கண்ணீரும் வற்றிவிட்டன. அந்தளவுக்கு அரசாங்கங்களால் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவை, இலங்கைக்கு இனியும் கால அவகாசம் வழங்கக் கூடாது என்ற கோரிக்கைகள் வலுத்துநிற்கின்றன. எனினும், நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை ஒரு காரணமாக காண்பித்து, இழுத்தடிப்பதற்கு இவ்வரசாங்கமும் முயற்சிக்கக்கூடும்.

அதற்கு இடமளிக்காதவகையில் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். இல்லையேல், அடுத்த கூட்டத்தொடர் வரும் வரையிலும் நீண்டு செல்லும். கால அவகாசம் வழங்கப்படுமாயின் காலத்தை கடத்திக்கொண்டே அரசாங்கம் செல்லும். சாட்சிகள் கொஞ்சம், கொஞ்சமாக மரணிக்கும். அதற்கிடையே புதுப்புது பிரச்சினைகளை தோற்றுவித்து, தொனிப்பொருளை திசைத்திருப்பவும் முயற்சிக்கக்கூடும். ஆகையால், முன்வைக்கப்பட்டுள்ள வரைவில் இன்னும் இறுக்கமான தன்மையை பேணி, மிகப்பெரிய அழுத்தங்களை கொடுக்கவேண்டும். கால அவகாசம் வழங்கப்பட்டால், காலம் மட்டுமே கடத்தப்படும் என்பதை நினைவில் கொள்க.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

மிகவும் அழகான பனித்துளிகள், வெயில் வந்ததும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகின்றன.

அழகானதும் நிம்மதியானதும் சுபீட்சமானதுமான வாழ்க்கையை வாழ்பவர்களின் உயிரும் சரி, மிகவும் வறுமையில் தரித்திர வாழ்க்கை வாழ்பவர்களின் உயிரும் சரி, காலம்நேரம் வந்தால் தேகத்தை விட்டு விலகிவிடுகின்றது. .

எந்த வாழ்க்கையிலும் உயிர் நிரந்தரமானது இல்லை. இந்த வாழ்க்கையில்தான் வறுமையும் செல்வமும் வந்துபோகின்றது. நிதானத்துடனும் நேர்மையுடனும் உண்மையாகவும் வாழ்ந்தால், ஸ்திரமானதும் நிம்மதியானதும் மகிழ்ச்சிகமானதுமான அழகான வாழ்வு முறைகளைச் சிருஷ்டிக்க முடியும்.

நல்ல அறிவு, ஆற்றல், பண்பு, உண்மை என்பவற்றைக் கடைப்பிடித்து வாழ்வதால்த்தான், எண்ணிய பயன்கள் பூரணத்துவமாக வந்துசேரும். அகவாழ்வு தூய்மையுடன் திகழ்ந்தால், புறவாழ்வு நிலையானதாக அமையும்.

பிறரது பலவீனங்கள், குறைகள் போன்றவற்றைச் சுட்டிக்காட்டியபடியே இருப்பவர்கள், திருப்பதியுடன் வாழமுடியாது. சாதனைகளைச் செய்ய விரும்புபவர்கள், ஏனைய அனைவரின் நலன்களிலும் கவனம் செலுத்த வேண்டும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ‘அறகலய’ எனும் அரசியல் ஆயுதம்



என். கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


சிங்களத்தில் ‘அறகலய’ என்றால், ‘போராட்டம்’ என்று பொருள். இந்தாண்டு இலங்கையில் இடம்பெற்ற ‘கோட்டா கோ ஹோம்’ போராட்டம் பெரும் மக்கள் எழுச்சியானது. இது, ‘அறகலய’ என்றே பொதுவில் இனங்காணப்படுகிறது.

இந்தக் ‘கோட்டா கோ ஹோம்’ மக்கள் எழுச்சிக்கு, ஆரம்பத்தில் இலங்கை எங்கும் ஆங்காங்கே கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களே ஆரம்பப்புள்ளி. இவை கட்சி சார்ந்த அல்லது இடதுசாரி அமைப்புகள் சார்ந்த ஆர்ப்பாட்டங்கள் அல்ல! பொதுமக்கள், தாமாக வீதிக்கு இறங்கி, அமைதி வழியில் ஆரம்பித்த ஆர்ப்பாட்டங்கள்.

இப்படி, பொதுமக்கள் கொழும்பில் ஒன்று திரண்ட இடங்களில், ஆர்ப்பாட்டங்களுக்கு என்று கோட்டாபயவே ஒதுக்கிய காலிமுகத்திடலுக்கு எதிரிலான, ஜனாதிபதி மாளிகைக்கும், ‘ஷங்றி-லா’ ஹொட்டலுக்கும் அருகிலான இடம். இதற்கு ஒரு சிலர் ‘கோட்டா கோ கம’ (கோட்டா போ கிராமம்) என்று பெயரிட்டு, பெயர்ப்பலகையை வைக்க, அதுவே இவ்விடத்தைக் குறிக்கும் பெயராகியது.

இதன் தொடர்ச்சியாக இலங்கை எங்கும், ‘கோட்டா கோ ஹோம்’ ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் இலங்கையர்கள், அந்நாடுகளிலும் ‘கோட்டா கோ ஹோம்’ ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தார்கள்.

மிகவும் அமைதியான வழியில் போராடுவதற்கான தமது உரிமையை பொதுமக்கள் வெற்றிகரமாகப் பயன்படுத்தி, ராஜபக்ஷர்களுக்கு கடும் அழுத்தத்தை வழங்கி, அதன் விளைவாக கோட்டாவையும் மஹிந்தவையும் தவிர, மற்றைய ராஜபக்ஷர்கள் எல்லாரும் பதவி விலகியிருந்த நிலையில்தான், இந்த ‘அறகலய’வின் அடுத்த கட்டம் உருப்பெற்றது.

அது, அன்று பிரதமராக இருந்த மஹிந்தவின் பதவி விலகல். மஹிந்த பதவி விலகும் தினமன்று, அலரி மாளிகையில் கூட்டிய பெருங்கூட்டம், அங்கிருந்து புறப்பட்டு, அலரிமாளிகைக்கு முன்னிருந்த ‘மைனா கோ கம’ ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்கிவிட்டு, ‘கோட்டா கோ கம’ நோக்கிப் பயணித்து, அங்கிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்கியது. இந்தக் கோரத் தாக்குதலுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்; தாக்குதலில் ஈடுபட்டவர்கள், தாக்குதலில் ஈடுபடத் தூண்டியவர்கள் என அனைவரும் நீதியின் முன்னே நிறுத்தப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் சாதாரண மக்கள் எவருக்கும் இருக்க முடியாது.

ஆனால், இதே தினம்தான் இந்த ‘அறகலய’வின் இன்னொரு பக்கம் வெளிச்சத்துக்கு வந்தது. அலரிமாளிகையிலிருந்து வந்த காடையர்கள், ‘கோட்டா கோ கம’ ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்கிவிட்டார்கள் என்று தெரிந்ததும், எதிர்க்கட்சி தலைவர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அங்கு விரைந்தார்கள்.

ஜே.வி.பி தலைவர் அநுர குமார, ‘கோட்டா கோ கம’வுக்கு வந்தபோது, ஒரு ‘ஹீரோ’ போல அவருக்கான வரவேற்பு, சில ஆர்ப்பாட்டக்காரர்களால் வழங்கப்பட்டிருந்தது. அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்னவோடு அங்கு வந்தபோது, அவர்கள் மீது சில ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தி, அவர்களை ஓடஓட விரட்டினார்கள். பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன அங்கு வந்தபோது, அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இதுதான், பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டு, இயற்கையாக வளர்ந்த ‘அறகலய’வின் முன்னரங்கிற்கு ஜனநாயக விரோத சக்திகள் வந்துவிட்டன என்பது அனைவருக்கும் வெளிப்படையாகத் தெரியவந்த முக்கிய சந்தர்ப்பம். தொடர்ந்து, அடுத்த தினங்களில், ராஜபக்ஷர்கள், மற்றும் அவரது ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள், சொத்துகள் எரியூட்டப்பட்டன.

அமைதி வழியில் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த ஜனநாயக போராட்டத்துக்குள் ஜனநாயக விரோத சக்திகள் நுழைந்து, தம் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கத் தொடங்கியது, தற்போது ‘வெள்ளிடை மலை’யாகத் தெரிந்தது.

பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டு, இயற்கையாக வளர்ந்த ‘அறகலய’வை சொந்தம் கொண்டாட, ஜனநாயக விரோத இடதுசாரி சக்திகள் தொடங்கின. ‘அறகலய’ முளைவிட்டு, வேர்விட்டு வளரும் வரை, பின்னரங்கில் பதுங்கியிருந்த இந்த ஜனநாயக விரோத இடதுசாரி சக்திகள், தற்போது, அதனை தாமே வழிநடத்த வேண்டுமென முன்னரங்கிற்கு முன்னேறியிருந்தார்கள்.

இதன் விளைவாக, ஜூலை ஒன்பதாம் திகதி, அதுவரை காலமும் எந்த வன்முறையும் சட்டவிரோத நடவடிக்கைகளுமின்றி அமைதிவழியில் போராடி, நிறையவற்றைச் சாதித்துக்கொண்ட மக்கள் போராட்டம், இந்த இடதுசாரி ஜனநாயக விரோதிகளின் வழிநடத்தலில் சிக்கி, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை, பிரதமர் காரியாலயம் என்பவற்றுக்குள் உடைத்துக்கொண்டு உள்நுழைந்தது.

இதுதான் சந்தர்ப்பம் என்று உணர்ந்த, ரணில் விக்கிரமசிங்கவோடு தனிப்பகை கொண்டிருந்த கூட்டமொன்று, ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு முன்னால் கூடியது. அதன் விளைவாக, ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வீடு எரியூட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து, நாட்டை விட்டு வெளியேறினார் கோட்டாபய ராஜபக்ஷ. அடுத்து, பாராளுமன்றத்தைக் கைப்பற்ற ஒரு கூட்டம், இதே இடதுசாரி ஜனநாயக விரோத சக்திகளின் தலைமையில் சென்றது. ரணில் விக்கிரமசிங்கவின் உறுதியான முடிவால், அந்த நடவடிக்கை தகர்க்கப்பட்டது.

மேற்சொன்ன வன்முறைகளைக் கண்ட பொதுமக்களுக்கு, இந்த ஜனநாயக விரோத சக்திகளின் நிகழ்ச்சி நிரல் புரிந்தது. மக்களுக்கு ஆட்சியாளர்கள் மீதுதான் கோபமேயன்றி, ஜனநாயக ஆட்சி முறையை, அரசியலமைப்பை, சட்டத்தின் ஆட்சியை எல்லாம் தகர்ப்பது மக்களின் விருப்பமோ, நிகழ்ச்சிநிரலோ அல்ல.

இந்த இடதுசாரி ஜனநாயக விரோத சக்திகள், மக்களின் ஆட்சியாளர்கள் மீதான கோபத்தை, இலங்கையின் ஜனநாயக கட்டமைப்புகளைத் தகர்த்து, தம்முடைய இடதுசாரி சர்வாதிகார நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கப் பயன்படுத்த முனைகின்றமை மக்களுக்கு தெளிவாகப் புரிந்ததால்தான், ஜூலை ஒன்பதாம் திகதிக்குப் பிறகு, மக்கள் தாமாக, இதுவரை மீண்டும் வீதிக்கு இறங்கவில்லை.

இடதுசாரி கட்சிகளும் அவை சார்ந்த அமைப்புகளும் ஒரு 400-500 பேர்களைக் கொண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்தகின்றனவே அன்றி, ‘அறகலய’ போல பொதுமக்கள் இவர்களின் ஜனநாயக விரோத நிகழ்ச்சி நிரலுக்குள் மீண்டும் வர விரும்பவில்லை என்பது, மிகத் தெளிவாகவே தெரிகிறது.

பொதுமக்கள், ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேரம் வழங்கிப் பார்க்க விரும்புகிறார்கள் என்றே தெரிகிறது. இடதுசாரிகளும் தற்போது தமது தனிப்பட்ட காரணங்களுக்காக, ரணிலோடு முறுகிக்கொண்டு நிற்கும் ரணிலின் முன்னாள் ஆதரவாளர்களான அரசியல்வாதிகளும் படித்த, ஆங்கிலம் பேசும் ‘சிவில் சமூகமும்’ எதிர்கால அரசியல் கனவோடு, இந்தப் போராட்டத்தை தமது அரசியல் வாழ்க்கைக்கான திறவுகோலாகக் கருதும் சில இளைஞர்களும், இன்று ரணில் எதிர்ப்பை மும்முரமாக முன்னெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்குத் தமது நிகழ்ச்சி நிரலை இங்கு முன்னெடுக்க விரும்பும் சில வெளிநாடுகளும் பின்னணியில் ஆதரவளித்து வருகின்றன.

இரண்டு மாதங்களுக்கு மேலாக, ரணில் எதிர்ப்பை கடுமையான முன்வைக்க இவர்கள் பகிரதப்பிரயத்தனப்பட்டாலும், இதுவரையும் இவர்களால் அவர்களது நிகழ்ச்சிநிரலுக்குள் பொதுமக்களைக் கொண்டு வரமுடியவில்லை. இதுவரை மக்கள், அதற்கு இடமளிக்கவில்லை என்பது மக்களின் வெற்றி. இவர்களது கைப்பிள்ளைகளல்ல நாங்கள் என்பதை, மக்கள் நிரூபித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இதனை ரணில் விக்கிரமசிங்க, தன்னுடைய வெற்றியாக எண்ணிவிடக் கூடாது. மக்கள் அவர் என்ன செய்யப்போகிறார் என்பதை பார்ப்பதற்காக நேரமளித்து இருக்கிறார்கள். 6.9 மில்லியன் மக்களின் பேராதரவோடு வந்த கோட்டாவை வெளியேற்ற, இராணுவம், பொலிஸ் என எதற்கும் அஞ்சாமல் வீதிக்கிறங்கிய பொதுமக்களுக்கு, நாளை ரணிலை வெளியேற்ற வீதிக்கிறங்க முடியாது என்றில்லை.

ஆகவே, மக்களுக்கு நன்மை செய்வதினூடாக மக்கள் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டிய பெருங்கடமை ரணிலுக்கு இருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற பெரும்பான்மையைத் தக்கவைக்க சில விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டிய கையறு நிலையில் நிற்கலாம்.

ஆனால், அவர் மக்களை முன்னிறுத்தி அரசியல் செய்தால் மட்டுமே, அவருக்கு அரசியலில் எதிர்காலம் இருக்கும் என்பது, பழுத்த அரசியல்வாதியான அவருக்கு சொல்லிப்புரிய வைக்க வேண்டியதொன்றல்ல; மக்கள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்!

## கடிதங்கள்

### பாதை சீரின்மையால் பஸ் சேவை நிறுத்தம்

திருக்கோவில், தங்கவேலாயுதபுரம் கிராமத்துக்கான பிரதான பாதை குன்றும்குழியுமாக இருப்பதால், அங்கு சேவையீடுபட்ட ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், மாணவர்களும் ஆசிரியர்களும் விவசாயிகளும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டு இருப்பதால், 12 கிலோ மீற்றர் தூரத்தை நடந்தே பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பஸ் டிப்போவால், திருக்கோவிலில் இருந்து தங்கவேலாயுதபுரம் கிராமத்துக்கான பஸ் சேவை தினமும் இரண்டு தடவைகள் இடம்பெற்று வந்தன.

இவ்வேளையில், அக்கரைப்பற்று - பொத்துவில் பிரதான பாதையில் தாண்டியடி சந்தியிலிருந்து, தங்கவேலாயுதபுரம் செல்வதற்கான வீதியே மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. மண்ஏற்றும் கனரக வாகனங்கள் தொடர்ச்சியாக இப்பாதையை பயன்படுத்தியதன் காரணமாக, இப் பாதை படுமோசமாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறது.

இப்பிரதேசத்தில், 12,000 ஏக்கர் வயல் காணிகளும் இருக்கின்றன. அவற்றுக்கு செல்கின்ற விவசாயிகள், கால்நடையாகவே செல்ல வேண்டியிருக்கின்றது. தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு செல்லுகின்ற மக்களும் கால்நடையாக செல்வதை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

வி. ரி சகாதேவராஜா

# Anthoney's Meatlery விற்பனைத் தொடர் அறிமுகம்

நியுஅந்தனீஸ் பாம்ஸ் (பிரைவட்) லிமிடெட், Anthoney's Meatlery எனும் தனது விற்பனையகத் தொடரை அறிமுகம் செய்துள்ளது. தனது ஒட்டுமொத்த விரிவாக்க தந்திரோபாயத்துக்கமைய, முதலாவது விற்பனையகத்தை, பத்தரமுல்ல, கொஸ்வத்த பகுதியில் திறந்துள்ளது.

அதிகளவு இடவசதிகளைக் கொண்ட நவீன இறைச்சி சுப்பர் மார்க்கெட் தொடரை அடிப்படையாகக் கொண்டதாக Anthoney's Meatlery அமைந்துள்ளது. உற்பத்தி செய்யப்பட்டதிலிருந்து 24 மணி நேரத்தினுள், இந்த விற்பனையகத்திலிருந்து சிறந்த இறைச்சி தயாரிப்புகளை வாடிக்கையாளர்களால் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும். இதனூடாக பசுமை, பாதுகாப்பு, தரம் ஆகியவற்றை வழங்கும் வர்த்தக நாமத்தின் உறுதிமொழி பிரதிபலிக்கப்பட்டு உள்ளது.

'நியு அந்தனீஸ் பாம்ஸ்' பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர கருத்துத் தெரிவிக்கையில், "எமது சகல தயாரிப்புகளையும் கொண்ட, எமது முதலாவது விற்பனையகத்தை நிறுவுவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இதனூடாக எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறந்த அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். உள்நாட்டு சந்தையில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லாக அமைந்திருப்பதுடன், விரைவில் நாட்டின் ஏனைய பாகங்களிலும் விற்பனையகங்களை திறப்பதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம்" என்றார்.



Haritha Hari, Crizzpys, Chico, Precut, Pet food போன்றவற்றுடன் அண்மையில் சேர்க்கப்பட்ட ஆறு துண்டுகள் கொண்ட HIT பொதி போன்றவற்றுடன், சொசேஜ் வகைகள், பிரெட்டட் தெரிவுகள், குளிர்ச்சியான துண்டுகள், முட்டைகள், வாசனைத்திரவியங்கள், சிக்னேச்சர் சோஸ் வகைகள் போன்ற 'நியு அந்தனீஸ் பாம்ஸ்' வழங்கும் சகல தெரிவுகளையும் இந்த விற்பனையகம் கொண்டிருக்கும்.

நாட்டில் கோழித் தீன்களுக்கான தட்டுப்பாடு நிலவிய போதிலும், தனது இறைச்சி தெரிவுகளை போதியளவில், தட்டுப்பாடின்றி விநியோகிப்பதை 'நியு அந்தனீஸ் பாம்ஸ்' அண்மையில் உறுதி செய்திருந்தது. அத்துடன், உள்நாட்டிலும் சர்வதேச சந்தைகளிலும் அதிகரித்துச் செல்லும் கேள்விகளை நிவர்த்தி செய்யும் வகையில், தனது உற்பத்தியையும் விரிவாக்கம் செய்திருந்தது. வெளிநாட்டு சந்தைகளுக்கான உற்பத்தி விரிவாக்கத்தினூடாக, அந்நியச் செலாவணியையும் நாட்டினுள் கொண்டு வருவதற்கு நிறுவனத்துக்கு முடிந்துள்ளது.

போஷாக்கு நிறைந்த, 'அன்ரிபயோட்டிக்' அற்ற மற்றும் சுவை நிறைந்த பசுமையான மற்றும் பாதுகாப்பான இறைச்சி வகைகளை பல ஆண்டுகளாக அனுபவித்து வரும் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் செயன்முறைகளின் மற்றுமொரு படியாக, சொந்த விற்பனையகத்தை நிறுவும் நடவடிக்கை அமைந்துள்ளது. இந்த ஆண்டின் முற்பகுதியில், ஒன்லைன் இறைச்சி விற்பனைப் பகுதியையும் அறிமுகம் செய்திருந்ததுடன், நாடளாவிய ரீதியில் இலவச விநியோக சேவைகளையும் வழங்குகின்றது.

Anthoney's Meatlery இல் கோழி இறைச்சி தெரிவுகளுக்கு மேலதிகமாக பன்றி, ஆடு, மாடு போன்ற இறைச்சி தெரிவுகளும், விரைவில் மறிஆட்டு இறைச்சி தெரிவுகளையும் அறிமுகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய மொழிகள் தினத்தை முன்னிட்டு

# ஜாஸ் இசைப் பயணம்

இவ்வாண்டு செப்டெம்பர் 26ஆம் திகதியில் வரும் 'ஐரோப்பிய மொழிகள்' தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு, ஐரோப்பிய ஒன்றியம் (EU) சுவிட்ஸர்லாந்து தூதரகம், இத்தாலி தூதரகம், பிரெஞ்சு தூதரகம், அலையன்ஸ் ஃபிரான்சைஸ், கோதே-இன்ஸ்டிட்யூட் மற்றும் பிரிட்டிஸ் கவுன்சில் ஆகியவை இணைந்து, இலங்கையின் மூன்று முக்கிய நகரங்களில் பன்மொழி ஜாஸ் இசை சுற்றுப்பயணத்தை நடத்துகின்றன.

சமாதானம்மிக்க ஒருங்கிணைந்த சமூகமொன்றை நோக்கிய ஐரோப்பிய ஒன்றியத்தின் விரிவான பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக நடத்தப்படும் இப்பன்மொழி ஜாஸ் இசை சுற்றுப்பயணம் பிரதான, பொப் ரொக், ஜாஸ் ஃப்யூஷன், ஜாஸ் பொப், இலத்தீன் ஜாஸ் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

இலங்கை மக்களுடன் மொழியியல் பாரம்பரியத்தின் பன்முகத்தன்மையைப் பகிர்ந்து கொண்டு, கலாசாரங்களுக்கு இடையிலான புரிந்துணர்வை ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்படும் இச் சுற்றுப் பயணம் கொழும்பில் ஆரம்பித்து, கண்டிக்கு பயணித்து பின்னர் யாழ்ப்பாணத்தில் நிறைவடையும்.

இதன் ஆரம்ப கச்சேரி கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் செப்டெம்பர் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் நடைபெறும். இது முதலில் வருவோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் அனைவருக்கும் திறந்திருக்கும் இலவச நிகழ்வாகும். இந்தக் கச்சேரியைத் தொடர்ந்து, கண்டியில் செப்டெம்பர் 26ஆம் திகதி திங்கட்கிழமை இரவு ஏழு மணிக்கு ஜாஸ் மாலை நிகழ்ச்சிகள், Slightly Chilled Lounge Bar and Restaurant இல் நடைபெறும். இறுதிக் கச்சேரி யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் செப்டெம்பர் 28 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.30 மணி முதல் நடைபெறும்.



இந்த நிகழ்வில் பாடகர், கிடார் கலைஞர், பாடலாசிரியர் எலியன் அம்ஹெர்ட், Bass இசைக் கலைஞரும் இசையமைப்பாளரும் தயாரிப்பாளருமான அமண்டா ருஸ்ஸா ஆகியோரின் நிகழ்ச்சிகள் ஜெர்மன், பிரஞ்சு, இத்தாலியன், போர்த்துக்கல், ஆங்கில மொழிகளில் இடம்பெறும்.

சுவிட்ஸர்லாந்தில் பிறந்த எலியன் அமெர்ட் நியூயோர்க்கில் வசிப்பதோடு, நகரின் புலமைமிகு பல்கலாசார உந்துசக்தியின் தாக்கமானது அவரால் சொந்தமாக உருவாக்கப்பட்ட உயிரோட்டமுள்ள, உத்வேகம் மிக்க ஆபிரிக்க, பிரேஸிலிய, லத்தீன் இசை பின்புலங்களைக் கொண்ட இசைக்கோர்வைகளினது தனித்துவமான ஒலியமைப்பில் புலப்படுகிறது. ஒரு திறமையான இசையமைப்பாளரும், பாடலாசிரியரும், ஜாஸ் மற்றும் தற்கால இசைக்கான த நியூ ஸ்கூல் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்தவருமான எலியன் நியூயோர்க்கின் பிரதானமான மனமகிழ் மன்றங்களில் முதன்மைக் கலைஞராகவோ, சிறப்புத்தோற்றத்திலோ நிகழ்த்துகைகளை மேற்கொள்கிறார். அத்துடன் வட-தென் அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டுள்ளதோடு, சீனா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மியன்மார், மலேசியா, நேபாளம், மொங்கோலியா ஆகிய நாடுகளில் சர்வதேச விழாக்களிலும் கலந்துகொண்டுள்ளார். அவர் பல்வேறு NYC இசைக்குழுக்களில் கிட்டார் வாசிப்பதோடு, மார்க்கஸ் ஸ்ட்ரிக்லண்ட், பஷிரி ஜான்சன், பில் வேர், ஹெகர் பென் ஆரி, ரெண்டி பிரெக்கர் போன்ற புகழ்பெற்ற கலைஞர்களோடு இணைந்து பணியாற்றியுள்ளார்.

சிலி நாட்டு தாய்க்கும் இத்தாலிய தந்தைக்கு பிரேஸிலின் சாவோ பாலோவில் பிறந்த அமண்டா ருஸ்ஸா, இசை ஆர்வம் கொண்டதொரு வீட்டில் வளர்ந்தார். அமண்டா இளம் வயதிலேயே Bass இசைக்க ஆரம்பித்ததோடு தொழில்சார் இசைத் துறையிலும் ஈடுபடத் தொடங்கினார். பிரேஸிலில், கிராமி விருது வென்ற மூகி கனாசியோ, மேஸ்ட்ரோ ஜோபம், ஜப்பானிய சோனி இசை நிறுவனத்தின் ஓஸ்னி மெல்லோ உள்ளிட்ட புகழ்பெற்ற பிரேஸிலிய தயாரிப்பாளர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களுடனும் அவர் பணியாற்றினார். இவர் தற்போது நியூயோர்க்கில் வசிக்கிறார். பலவிதமான பாணிகளில் சரளமாக இசைக்கக் கூடிய அமண்டா, போர்த்துகேச, ஸ்பானிய, இத்தாலிய, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சரளமாக பேசுகிறார்.

போபால்

# பிறந்த நாளில் தாயை சந்திக்க முடியவில்லை



மத்திய பிரதேசத்தின் ஷியோ பூரில் உள்ள கரஹாலில் சனிக்கிழமை (17) நடைபெற்ற சுய உதவி குழு மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். அப்போது சுய உதவிக் குழு பெண்களுக்கு பல் வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

புதிய இந்தியாவில் ஊராட்சியில் தொடங்கி குடியரசுத் தலைவர் மாளிகை வரை பெண்களின் சக்தி கொடி கட்டி பறக்கிறது. மத்திய பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் 17,000 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது ஒரு பெரிய மாற்றத்தின் அடையாளம் எனத் தனதுரையில் பிரதமர் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு மத்தியில் பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) அரசு பதவியேற்றது. அப்போது முதல், பெண்களின் கண்ணியத்தை உயர்த்தவும், அவர்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் சவால்களை தீர்ப்பதற்கும் மத்திய அரசு தொடர்ந்து உழைத்து வருகிறது என்றார்.

இன்று (17) எனது பிறந்த நாள். அரசு அலுவல்கள் காரணமாக இந்த நாளில் என்னை பெற்றெடுத்த தாயை சந்தித்து ஆசி பெற முடியவில்லை. எனினும், இங்கு கூடியிருக்கும் பழங்குடி தாய்மார்கள் என்னை ஆசீர்வதிக்கின்றனர். இலட்சக்கணக்கான பழங்குடி தாய்மார்களின் ஆசி எனக்கு கிடைத்திருக்கிறது. இதை பார்த்து எனது தாய் பூரிப்படைவார். என்றும் பிரதமர் தனதுரையில் தெரிவித்தார்.

புதுடெல்லி

## கருவறைக்கு தங்க தகடு

புகழ்பெற்ற சார் தாம் கோவில்களில் ஒன்றாக கேதார்நாத் உள்ளது. இங்குள்ள கருவறையில் தற்போது 230 கிலோ கிராம் நிறையில் வெள்ளி தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. மும்பையைச் சேர்ந்த வைர வியாபாரி ஒருவர் இங்கு தங்கத் தகடுகள் பொருத்திக் கொடுக்க முன்வந்துள்ளார்.

தங்க தகடுகள் பொருத்த அவர் அரசிடம் அனுமதி கோரினார். இதற்கு கடந்த மாதம் ஒப்புதல் கிடைத்தது. தங்க தகடுகள் தயாரிக்க எவ்வளவு தங்கம் தேவை எனத் தெரியவில்லை. தங்க தகடுகளுக்கு கீழே தாமிர தகடுகள் இருந்தாலும், அதில் பாதி அளவுக்கு தங்கம் இடம்பெறும் என எதிர்பார்க்கிறோம் என கோவில் நிர்வாகி தெரிவித்துள்ளார்.

தங்க தகடுகள் பொருத்துவதற்காக, வெள்ளித் தகடுகளை அகற்றும் பணியை தொடங்கிவிட்டோம். அதன்பின் கருவறைக்குள்ளும், தூண்களிலும் தாமிர தகடுகள் பொருத்தப்படும். அளவெடுக்கும் பணி முடிவடைந்ததும், தங்க தகடுகள் செய்யப்பட்டு பொருத்தப்படும். கருவறையின் சுவர்கள், மேற்கூரைகள் மற்றும் தூண்களில் தங்க தகடுகள் பொருத்தப்படவுள்ளன என்றார்.



பெங்களூர்

## பெண்ணொருவர் உடல் தானம்




பிரதமர் மோடியின் பிறந்தநாள் நேற்று முன்தினம் (17) கொண்டாடப்பட்டது. அவரது பிறந்தநாளை இரண்டு வாரங்களுக்கு கொண்டாட பாரதிய ஜனதா கட்சியினர் (பா.ஜ.க) ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் கர்நாடக மாநிலம் உடுப்பியை சேர்ந்த ஷில்பா சலியன் என்பவர் பிரதமரின் பிறந்த நாளை கொண்டாடும் விதமாக தனது உடல் உறுப்புகளை தானம் செய்வதற்கு முன்வந்துள்ளார். இவர் பிரதமரின் தீவிர ரசிகை என்பது தெரியவந்துள்ளது.

பின்னர் அவர் கூறுகையில், நான் பிரதமர் மோடியின் தீவிர ரசிகை. அவர் நாட்டிற்காக தனது வாழ்க்கையை தியாகம் செய்துவிட்டார். அவரை போல் வேறு யாரும் இனி வரப்போவது கிடையாது. இறந்த பிறகு நமது உடலை மண் தான் சாப்பிடுகிறது. அதை மாற்றும் நோக்கில், நான் எனது உடல் உறுப்புகளை தானம் செய்ய முடிவு செய்துள்ளேன். இதன் மூலம் 4 பேருக்கு மறுவாழ்வு கிடைக்கும். மேலும், மருத்துவ மாணவர்களின் கல்விக்கு அவை பயன்படும் என்றார்.

சண்டிகர்

## மாணவி கைது



பஞ்சாப் மாநிலம் மொஹாலியில் உள்ள சண்டிகர் பல்கலைக்கழகத்தில் பெண்ணொருவர் தனது சக தோழிகளின் அந்தரங்க வீடியோக்களை சமூக வலைத்தளங்களில் கசியவிட்டதாகக் கூறப்பட்டதை அடுத்து போராட்டங்கள் வெடித்தன. குற்றம் சாட்டப்பட்ட மாணவியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வீடியோ கசிவு காரணமாக பல மாணவிகள் தற்கொலை செய்து கொள்ள முயன்றதாக சமூக ஊடகப் பதிவு வெளியாகி இருப்பதை பல்கலைக்கழகமும் பொலிஸ்துறையும் மறுத்துள்ளன. மாணவி ஒருவர் மயக்கமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும், அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வேலூர்

## பிச்சைக்காரிக்கு பிரசவம்



வேலூரில் பொலிஸ் நிலையம் அருகே பிச்சை எடுக்கும் பெண்ணுக்கு, பெண் பொலிஸ் ஒருவர் நள்ளிரவில் பிரசவம் பார்த்ததில், அழகான பெண் குழந்தை பிறந்தது.

வேலூர் தெற்கு பொலிஸ் நிலையத்தில் பெண் தலைமை காவலராக இருப்பவர் இளவரசி. இவர் நேற்று அதிகாலை 2 மணியளவில் பணிக்கு வந்தார்.

பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்டு விட்டு வெளியே வந்தபோது எதிரே உள்ள கடை அருகே சுமார் 35 வயது மதிக்கத்தக்க பெண் அழுது கொண்டிருந்தார். சத்தம் கேட்டு, இளவரசி அருகே சென்று பார்த்தபோது, பிச்சை எடுக்கும் இளம்பெண் பிரவச வலியால் துடித்துக் கொண்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார். மேலும் அந்த இளம்பெண்ணுடன் 6 வயதில் ஓர் ஆண் குழந்தை இருந்தது.

இதையடுத்து, விரைந்து செயற்பட்ட பெண் பொலிஸ், சக பொலிஸாரின் உதவியுடன் இளம்பெண்ணுக்கு பிரசவம் பார்த்தார். அந்த பெண்ணுக்கு பெண் குழந்தை பிறந்தது. பின்னர் அந்த பெண்ணை 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து இளம்பெண் கூறுகையில், "திருமணம் ஆன சில மாதங்களில் கணவர் என்னை விட்டு விட்டு சென்றதால், அண்ணன்கள் பிச்சை எடுத்து பணம் தர வேண்டும் என வற்புறுத்தினர். இதனால் இப்பகுதியில் பிச்சை எடுத்து வருகிறேன்" என்றார்.

தென்காசி

## தின்பண்டம் விற்க மறுத்தவர் கைது



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே பாஞ்சாங்குளம் கிராமத்தில் உள்ள ஒரு பெட்டிக்கடைக்கு குழந்தைகள் சிலர் தின்பண்டங்கள் வாங்க வந்துள்ளனர். ஆனால், கடைக்காரர் அவர்களுக்கு பொருட்கள் விற்க மறுத்து, அதை வீடியோவாக பதிவு செய்து, சமூக ஊடகத்தில் பரப்பியுள்ளார். இது வலைதளங்களில் பரவி சர்ச்சையை ஏற்படுத்தியது.

2020ஆம் ஆண்டு பாஞ்சாங்குளம் கிராமத்தில் இரு சமுதாயத்தினர் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இதில், தீண்டாமை வன்கொடுமை வழக்கு பதிவு செய்யப்பட்ட ராமச்சந்திரன் (20) என்பவர், இராணுவத்துக்கு தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அவர் மீது வழக்கு நிலுவையில் இருந்ததால் அவருக்கு வேலை கிடைக்கவில்லை.

பிரித்தானியா

ஐக்கிய இராஜ்ய வரலாற்றில்

# விலை உயர்ந்த ஒற்றை நாள்

பிரித்தானியாவின் மகாராணி இரண்டாம் எலிசபெத் உடல் நலக் குறைவு காரணமாக கடந்த எட்டாம் திகதி காலமானார். தனது 25ஆவது வயதில் இராணியாகப் பதவியேற்ற எலிசபெத் ராணி, சுமார் 70 ஆண்டுகாலம் இராணியாகப் பதவி வகித்துள்ளார்.

இந்நிலையில் இராணியின் சடலம் இன்று (19), மறைந்த இராணியின் கணவர் இளவரசர் பிலிப் அடக்கம் செய்யப்பட்ட இடம் அருகே நல்லடக்கம் செய்யப்படும் எனக் கூறப்படுகின்றது.

இச் சூழலில் 'நியூயோர்க் போஸ்ட்' தகவலின் படி 'இராணி எலிசபெத் இறுதி சடங்கை பாதுகாப்பது, ஐக்கிய ராஜ்ஜிய வரலாற்றில் மிகவும் விலை உயர்ந்த ஒற்றை நாள் நடவடிக்கையாகும்.

இதற்காக சுமார் 7.5 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமாக



செலவாகும் எனக் கூறப்படுகிறது. மேலும், இன்று நடைபெறும் இறுதி சடங்கில் இதுவரை எதிர்பார்க்காத அளவில் வெளிநாட்டு தலைவர்களை பாதுகாக்க, பிரிட்டிஷ் எம்ஐ 5, எம்ஐ 6 உளவுத்துறை நிறுவனங்கள் இலண்டனில் பெருநகர பொலிஸ் துறை, இரகசிய சேவை போன்றவை இணைந்து செயற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரித்தானியாவின் பொலிஸார் இதுவரை மேற்கொள்ளாத மிகப்பெரிய பாதுகாப்பு நடவடிக்கை இதுவாகும். மற்ற நிகழ்வுகளை ஒப்பிடும்போது இது பெரும் சவாலாகும் என கருதப்படுகின்றது.



தென் ஆபிரிக்கா

பாடசாலை பஸ் மீது கனரக வாகனம் மோதி கோர விபத்து:

## 19 சிறுவர்கள் உயிரிழப்பு

தென்ஆபிரிக்காவில் குவாசுலு-நடால் மாகாணத்தின் பொங்கோலா நகரில் பாடசாலை பஸ் மீது எதிரே வந்த கனரக வாகனம் மோதி விபத்துக்கு உள்ளானதில் 21 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவத்தின் போது பஸ்ஸில் 5 முதல் 12 வயதுக்கு உட்பட்ட 19 சிறுவர்கள், சாரதி மற்றும் உதவியாளர் என மொத்தம் 21 பேர் இருந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியா

இடிந்து விழுந்தது தங்க சுரங்கம்

## 7 பேர் உயிரிழப்பு

இந்தோனேசியாவில் அதிக அளவில் தங்க சுரங்கங்கள் அமைந்துள்ளன. எனினும் நீண்ட காலமாக அந்நாட்டில் சட்டவிரோதமாக தங்கம் வெட்டி எடுக்கும் பணியானது இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் கினண்டி கிராமத்தில் அமைந்துள்ள தங்க சுரங்கத்தில் நேற்று முன்தினம் இரவு (17) சுமார் 20 க்கும் மேற்பட்டோர் சுரங்க வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக சுரங்கத்தின் மேல் கூரை இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்நிலையில், ஏழு பேர் இதுவரை சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இவ் விபத்து நடந்து சுமார் 48 மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டதால் மண்ணிற்குள் புதையுண்ட அனைவரும் உயிரிழந்திருக்க கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சவூதி அரேபியா

## 43 வருடங்களில் 53 பெண்களை திருமணம் செய்த நபர்



சவுதி அரேபியாவில் 63 வயதான நபர் ஒருவர், 53 பெண்களைத் திருமணம் செய்துள்ள விநோத சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சவுதி அரேபியாவை சேர்ந்தவர் அபு அப்துல்லா. 63 வயதான இவர் தனது 20 ஆவது வயதில் தன்னை விட ஆறு வயது மூத்த பெண்ணை முதலாவதாக திருமணம் செய்து கொண்டார். அந்த சமயத்தில் ஒன்றுக்கு மேல் திருமணம் செய்து கொள்ளும் எண்ணமே அவருக்கு இருந்தது இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், சில மாதங்கள் கழித்துமே முதல் மனைவியுடன் அபு அப்துல்லாவுக்கு மனக்கசப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால், இரண்டாவது திருமணம் செய்யும் எண்ணம் அபுவுக்கு வரவே, அதனை தனது மனைவியிடமும் அவர் கூறி உள்ளார். இரண்டாவது திருமணமும் அப்துல்லா செய்து கொள்ள, முதல் மற்றும் இரண்டாவது மனைவிக்கு இடையே தகராறு உருவாகி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்படியே மூன்று, நான்கு என அடுத்தடுத்து பெண்களை திருமணம் செய்து கொண்டும் விவாகரத்து செய்து கொண்டும் அபு அப்துல்லா வந்ததாக கூறப்படுகிறது.

தன்னுடைய மன நிம்மதிக்காகவே இவை நடந்ததாகவும் அபு குறிப்பிடுகிறார். மேலும் அவர் செய்த திருமணங்களிலேயே குறைந்த காலம் நீடித்தது என்றால், ஒரு நாளுடன் ஒரு திருமண வாழ்க்கை நின்று போனது என்பது தான்.

இதற்கு மத்தியில், தொழில் விடயமாக வெளிநாடு சென்றிருந்த அபு அப்துல்லா, ஒரு வெளிநாட்டு பெண்ணையே காதலித்து அங்கேயே திருமணம் செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது. இத்தனை மனைவிகளுக்கு பின், தற்போது ஒரே ஒரு மனைவியுடன் வாழ்ந்து வரும் அபு அப்துல்லா, இனிமேல் திருமணம் செய்து கொள்ளும் எண்ணமில்லை என கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தஜிகிஸ்தான்

எல்லையால் இரு நாடுகளுக்கிடையே மோதல்

## 27 பேர் உயிரிழப்பு

கிர்கிஸ்தான் மற்றும் கஜிகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் சுமார் 1,000 கிலோ மீற்றர் தூரத்தை எல்லைகளாகப் பகிர்கின்றன. ஆனால் எல்லை முழுவதுமாக வரையறுக்கப்படாததால் இரு நாட்டின் இராணுவத்திற்கும் இடையே பெரும் மோதலுக்கு வழி வகுக்கின்றது.

இந்நிலையில், கிர்கிஸ்தானுக்கும் தஜிகிஸ்தானுக்கும் இடையே மீண்டும் மோதல் வெடித்துள்ளது. இம்மோதலில் கிர்கிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள 2 கிராமங்கள் மீது தஜிகிஸ்தான் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது.



ஈரான்

## முறையாக ஹிஜாப் அணியாததால் பெண்ணின் உயிரைப் பறித்த பொலிஸார்

**ஈரானில் வலுக்கும் போராட்டம்**

ஈரானில் பெண்களுக்கான உடை கட்டுப்பாடுகள் கடுமையாக பின்பற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஹிஜாப் கட்டுப்பாடுகளை மீறும் பெண்கள் மீதும் கடும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கடந்த 16 ஆம் திகதி ஈரானில் சரியாக ஹிஜாப் அணியாததால் மஹ்சா அமினி என்ற 22 வயது இளம்பெண்ணை கைது செய்த பொலிஸார், அவரை சரமாரியாக தாக்கியுள்ளனர். இதில் கோமா நிலைக்குச் சென்ற இளம் பெண் உயிரிழந்த சம்பவம் உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.



மேலும் இந்தச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பெண்கள் பலர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்:

# அகஸ்பேர்க்கிடம் தோற்ற நடப்பு சம்பியன்கள்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான புண்டெஸ்லிகா தொடரில், அகஸ்பேர்க்கின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச் தோல்வியடைந்திருந்தது.

இந்நிலையில், பொரூசியா மொச்சென்கிளெட்பாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் ஆர்.பி லெய்ப்ஸிக் தோல்வியடைந்திருந்தது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற ஷல்கேயுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் பொரூசியா டொட்டமுண்ட் வென்றிருந்தது.



கேகாலை, றுவன்வெல்ல ராஜசிங்க ம.வியை

## வென்ற மாத்தளை சாஹிராக் கல்லூரி

■ அஸ்ஹர் இப்றாஹீம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கட் சம்மேளனம் நாடு தழுவிய ரீதியில் ஒழுங்கு செய்திருந்த 17 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கிரிக்கெட் தொடரின் அடுத்த சுற்றுப் போட்டிக்கு மாத்தளை சாஹிராக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாத்தளை இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கேகாலை றுவன்வெல்ல ராஜசிங்க மகா வித்தியாலயத்துடனான போட்டியில் வென்றே அடுத்த சுற்றுக்கு ஸாஹிராக் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது.


இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சாஹிராக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 159 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜசிங்க மகா வித்தியாலயம் சகல விக்கட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களைப் பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

## யுனைட்டெட்டுக்கு செல்லும் கிறீஸ்மன்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டின் முன்களவீரரான அந்தோனி கிறீஸ்மனை, அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

இன்னொரு ஸ்பானியக் கழகமான பார்சிலோனாவிலிருந்து கடனடிப்படையில் அத்லெட்டிகோ மட்ரிட்டில் காணப்படும் 31 வயதான கிறீஸ்மன் குறித்து இரண்டு அணிகளும் முரண்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





## ஷமியை பிரதியிட்ட உமேஷ்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானமையடுத்து இந்தியாவின் வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் ஷமி, அவுஸ்திரேலியாவுக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தியக் குழாமில் ஷமியை இன்னொரு வேகப்பந்துவீச்சாளரான உமேஷ் யாதவ் பிரதியிட்டுள்ளார். முன்னதாக, காயமடைந்த உமேஷ், காயத்திலிருந்து மீள்வதற்காக தேசிய கிரிக்கெட் அகடமிக்கு செல்வதாக இருந்தது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## லெய்செஸ்டரை வென்ற டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லெய்செஸ்டர் சிற்றியுடனான போட்டியில் 6-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் வென்றது.

டொட்டென்ஹாம் சார்பாக, சண் ஹெயுங்-மின் மூன்று கோல்களையும் மற்றும் ஹரி கேன், எரிக் டயர், றொட்றிகோ பென்டாக்கூர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். லெய்செஸ்டர் சார்பாக, யூரி டெலிமான்ஸ், ஜேம்ஸ் மடின்ஸன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 19 செப்டெம்பர் 2022, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.